Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 16 (13.10.2003) திங்கட்கிழமை இதழ்:13

## கனேடிய வெளியுறவு அமைச்சர் பிரபாகரனை சந்திக்க விருப்பம்!

### அந்த நாட்டுத் தூதரகம் புலிகளுக்கு அவசர கடிதம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில்கிரஹம் சந்திக்க விருப்பம் தெரிவித்து, அந் நாட்டு தூதுவராலயம் நேற்று விடுதலைப் புலிகளுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை வரவுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில், ஜனாதிபதி, பிரதமமந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல்வேறு அரசியற் தலைவர்களைச் சந்தித்து, இலங்கையின் அரசியல் நிலைமை தொடர்பாக அறிந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.வரும் வெளிவிவகார அமைச்சர், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் அரச அதிபர் ஆகியோரையும் (10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பத்திரிகையாளர்களில் ஒரு பகுதியினர்

# தமிழரசுக் கட்சி புனரமைப்பு; பிளவுபடும் நிலையில் கூட்டணி!

(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையின் செயற்பாடுகளில் அதிருப்தியுற்றுள்ள, பழம்பெரும் கட்சியான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் மீண்டும் அந்தக் கட்சியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது.**


தமிழரசுக் கட்சிக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் 15 உறுப்பினர்கள் கொண்ட இடைக்கால நிர்வாகக் குழு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் அலுலகத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டம் தமிழரசுக் கட்சி உறுப்பினர் எவ்.எக்ஸ். குணநாயகம் தலைமையில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா சிறப்புரை நிகழ்த்தியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டனர். மேலும் கூட்டணியின் தற்போதைய செயற்பாடுகள், மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள அதிருப்தியைக் களையும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும்,

கூட்டமைப்பின் அண்மைக்கால செயற்பாடுகள் ஒருவரையொருவர் சாடுவதாகவே இருக்கிறது. தமிழ் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப இனி கூட்டணிக்குள்ள குழப்பம் தான்...!

## உழவு இயந்திரம் மோதி நீர்வேலியில் ஒருவர் பலி!

(அச்சுவேலி)

நீர்வேலி - அச்செழுப் பகுதியில் உழவு இயந்திரமொன்று துவிச்சக்கரவண்டியில் வந்தவர்களை மோதியதில், ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன், அவருடன் கூட வந்தவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை நடைபெற்றது. அளவெட்டி கணேஸ்வரத்தைச் சேர்ந்த அ.உதயசீலன் (வயது41) என்பவரே உயிரிழந்தவராவார். இவருடன் வந்தவரான சி. சந்திரகுமார் (வயது 30) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் கைதான மாணவர்களை விடுவிக்காவிடின் போராட்டம் நடத்துவோம்!

### தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

அரியாலை - மாம்பழம் சந்திப் பகுதியில் இராணுவ கவசவாகனம் ஓட்டோவுடன் மோதிய சம்பவத்துடன், பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையினைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும். இல்லை யெனில் குடாநாடு தழுவிய போராட் டத்தை நடத்தப்போவதாக, யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

நேற்று முன்தினம் அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் இராணுவ வாகனத்தால் ஏற்படுத்தப்பட்ட விபத்தைத் தொடர்ந்து, அந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொது மக்கள் மீது இராணுவம் மிகத் திட்டமிட்ட வகையில் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளது. திட்டமிட்ட வகையில் அவ்விடத்திற்கு உடனடியாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, அங்கு நின்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு கண்ணீர் புகை, (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை வளாகத்துள் ஆயுதம் தரித்த பொலிஸார்!

### மாணவர்கள் அதிருப்தி தெரிவிப்பு!

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்று ஆயுதம் தரித்த பொலிஸார் வந்ததையிட்டு, மாணவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவியது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் சட்ட உதவிகள் மன்றத்தின் சட்ட ஆலோசனைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு சட்ட உதவிகள் மன்றத் தலைவர் விஜேரட்ண கொழும்பிலிருந்து வருகை தந்திருந்தார். இவருக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்கும்படி அரசினால் பணிக்கப்பட்டதாகவும் அதற்காகவே ஆயுதம் தரித்த பொலிஸார் பல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் இராணுவ வாகன விபத்துக்கள்; உயர்மட்ட விசாரணைக்கு பலகல்ல உத்தரவு!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வாகன விபத்துக்கள் தொடர்பாக, விசாரணை நடத்துவதற்கென, விசேட குழுவொன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகள் நடத்துவதற்கு, இராணுவத்தளபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரியாலை - மாம்பழம் சந்தியில் இராணுவ வாகனமொன்று, பொதுமக்கள் பயணம் செய்த ஓட்டோ ஒன்றுடன் நேற்றுமுன்தினம் மோதியது.

கடந்த மூன்றாம் திகதி யாழ்ப்பாணத்தில், இராணுவ வாகனமொன்று மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் பலியாகினர். கொட்டடியிலும், இராணுவ வாகனம் மோதி ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்தவே, இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

## பத்திரிகையாளர் மீதான தாக்குதல்: கண்டனம் தெரிவித்து நேற்று மறியற்போர்!

அரியாலை - மாம்பழம் சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தையடுத்து - படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நடைபெற்ற அனர்த்தத்தின்போது பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து - யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கமும், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கமும் இணைந்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக மறியற்போராட்டம் ஒன்றை நேற்று நடத்தின.

குடாநாட்டைச் சேர்ந்த பெருமளவு பத்திரிகையாளர்கள், கோயில் வீதியில் உள்ள கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன் நடத்தப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)



எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# பத்திரிகையாளர் மீதான தாக்குதல்; ஜனநாயக உரிமையை மீறும் செயல்

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை

அரியாலை தபால்கட்டைச் சந்தியருகில் - நேற்று முன்தினம் இராணுவ வாகனம் ஓட்டோமீது மோதிய சம்பவம் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களை, இராணுவம் கடுமையாகத் தாக்கியதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நேற்று முன்தினம் - இராணுவத்தினர் தபால்கட்டைச் சந்தியருகில் செய்தியாளர்கள் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு :

நேற்று மாலை அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இராணுவ வாகனம், ஆட்டோ ஒன்றின் மீது மோதியதைத் தொடர்ந்து, அந்தப் பகுதி மக்கள் இவ்வாறான விபத்துக்களை இராணுவம் திட்டமிட்டே மேற்கொண்டு வருகின்றதென்பதை உணர்ந்துகொண்டு, இந்த ராணுவ கொலை வெறியாட்டத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த போது, மக்களை அடக்கும் நோக்கோடு, இராணுவம் தன் கொலைப் பசியை மக்கள் மீது தீர்க்க எண்ணி துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைக்குண்டு மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ்வாறே, சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற பத்திரிகையாளர்களை - பத்திரிகையாளர் என இனங்கண்ட பின்னரும்கூட, இராணுவம் கடுமையாகத் தாக்கியதோடு, அவர்கள் கொண்டுசென்ற புகைப்படக் கருவிகளையும் பறித்தெடுத்தனர். இதற்கு உண்மையான காரணம் - இராணுவத்தின் இந்தக் கொலை வெறியாட்டத்தை, பத்திரிகையாளர்கள் படம்பிடித்து நடைபெற்ற உண்மைச் சம்பவத்தை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தி விடுவார்கள் என்ற கபடநோக்கத்தோடே பத்திரிகையாளர் மீது இராணுவம் தாக்குதலை மேற்கொண்டது. எனவே இந்த ஜனநாயக உரிமை மீறல் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவங்கள் இன்று நேற்று மட்டுமல்ல மானிப்பாய், நெல்லியடி என்று தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இராணுவ வெறியர்கள் நினைப்பதுபோன்று பத்திரிகையாளர்களையோ அல்லது மக்களையோ தாக்குவதனூடாக மக்களின் விடுதலை உணர்வெழுச்சியை மழுங்கடிக்கமுடியாது என்பதை சிங்கள இராணுவம் உணர்ந்து கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிரந்தர நியமனம் வழங்கும்வரை எமது போராட்டங்கள் தொடரும்!

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படாமையை ஆட்சேபித்து நடத்தி வரும் தமது போராட்டம் தொடர்பாக கூட்டமைப்பு, பிரதமருடன் சந்தித்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் தமது போராட்டம் தொடருமென பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு.

வடக்கு-கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், தொடர்ந்து மேற்கொண்டு வரும் பாடசாலைப் புறக்கணிப்பு மற்றும், உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்கின்றன. திருகோணமலை அமைச்சு பணிமனை முன் 19 நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறோம.

கடந்த சர்வதேச ஆசிரியர் நாளையும் கரிநாளாக நாம் பிரகடனம் செய்து எமது எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தோம். எமது நிரந்தர நியமனம் தொடர்பாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினருக்கு வரும் பதினாறாம் திகதி வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் எமது விடயம் குறித்து நல்லதோர் முடிவு எட்டப்படாவிட்டால், தொடர்ந்து எமது போராட்டத்தை முன்போல் விரிவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரநியமனத்திற்குட்படுத்தாமல் ஆங்கில தினப்போட்டிகள் நடத்த முயலும் கல்வியமைச்சின் முயற்சியினால் வடக்கு - கிழக்கின் பல பின் தங்கிய பகுதிகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### அரியாலை - மாம்பழம் சந்திப் பகுதியில்

# இராணுவத்தினர் நடந்துகொண்ட விதம் சமாதானத்தை அவமதிக்கும் செயல்!

## யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில், நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ வாகனம்-ஆட்டோ விபத்து சம்பவத்தையடுத்து, பொது மக்கள், பத்திரிகையாளர், மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, ஆயுதப்படையினர் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காகச் செய்த திட்டமிட்ட செய்கையென யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரியாலை மாம்பழம் சந்தியில், இராணுவமும், பொலிஸாரும் மேற்கொண்ட அத்துமீறல்களையும், அடாவடித்தனத்தையும் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சட்டத்தையும், ஒழுங்கையும் பேண வேண்டிய பொலிஸாரும், இராணுவத்தினரும் தொடர்ந்தும் இத்தகைய வன்முறைகளுக்கு துணை போவதும், தூபமிடுவதும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத பாரதூரமான மனிதநேய விரோதச் செயற்பாடாகும்.

கண்டி வீதியால் வேகமாகச் சென்று கொண்டிருந்த, இராணுவ 'பவல்' வாகனம் ஒன்று வீதியால் சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்றின் மீது மோதியுள்ளது. இதனால், ஆட்டோ பாரிய சேதத்திற்குள்ளான போதும், அதன் சாரதி காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

உண்மை நிலைமையை அறிவதற்காகவும், பாதிக்கப்பட்ட சாரதிக்கு உதவி புரிவதற்காகவும், ஒன்று கூடிய பொதுமக்கள் மீது தாக்குதலைமேற்கொண்டதுடன், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர். அதேவேளை - இச்சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை இலக்காகக் கொண்டு படையினரும், பொலிஸாரும் கண்மூடித்தனமாகத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். தாம் செய்தியாளர்கள் என்பதை அடையாளப்படுத்தியபோதும், தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இது ஒரு கோழைத்தனமான அராஜகச் செயற்பாடு என்பது மட்டுமல்லாது, மக்களுக்கு ஆத்திரமூட்டி, சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்குடன் சிங்கள ஆயுதப்படையினர், திட்டமிட்டு இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதுதான் உண்மை.

இதுபோன்ற சம்பவங்கள் அண்மையில் தொடர்கதையாக நீடிப்பதும், தட்டிக்கேட்கும் மக்கள் மீதும், செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டு, உயிராபத்துக்களை ஏற்படுத்துவதை மக்கள் எவ்வளவு காலத்திற்குப் பொறுமையுடன் பொறுப்பது என்பதுதான் இன்றைய கேள்வியாக ஒவ்வொரு உணர்வு படைத்த மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்திலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, சிறிலங்காப் படையினர் எந்தக்கட்டுபாடும் இன்றி, தான்தோன்றித்தனமாக, இனவாத உணர்வோடு செயற்பட்டு வருகின்றனர். இவர்களை ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பது சிங்கள அரசின் பொறுப்பு அல்லாவிடின் இன்றைய சமாதானச் சூழ்நிலையில் பெரும் பாதிப்புக்களையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

தொடரும் சமாதனச் சூழல் ஆரோககியமானதாக அமைய அரச தரப்பும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி படைகளை விலக்கிக் கொள்வதே சிறந்த வழியென இச்சம்பவங்களின் ஊடாக வலியுறுத்தி நிற்கிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட-கிழக்கு மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ஆங்கிலதினப் போட்டி நிகழ்வுகள் இன்றும், நாளையும் திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்வில் மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

மேலும் இந்த நிகழ்வுக்கு தீர்ப்பாளர்களாக கடமையாற்றுவதற்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து வலயங்களது ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் செல்கின்றார்கள். (83)

### உயரப்புலம்

# பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு!

(உடுவில்)

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் அமைந்துள்ள உயரப்புலம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து, விநாயகர் விக்கிரகம் கடந்தவாரம் திருட்டுப்போயுள்ளது. அன்றிரவு அதே வீதியில் அமைந்துள்ள ஆலடி வைரவர் ஆலயத்திலும் வைரவர் மற்றும் விநாயகர் விக்கிரகங்கள் திருடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக - இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் அராலி தெற்கு சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்திலும் இதுபோன்ற திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளது. (101)

# உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் புதிய மாணவர்களுக்கு அனுமதி!

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர்தொழிநுட்ப கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் உயர்தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2002 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க.பொ.த.(உ.த)தில் சித்தியடைந்து, தேவையான தகைமைகளை பூர்த்திசெய்த மாணவர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

யாழ்.உயர்தொழிநுட்ப நிறுவனத்தில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா, ஆகிய கற்கை நெறிகளைத் தொடரவிரும்புவோர் இல.78 பலாலி வீதியிலுள்ள உயர்தொழிநுட்ப நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று, நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# இந்திய - நியூஸிலாந்து முதல் ரெஸ்ற் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது!



(புதுடெல்கி)

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ரெஸ்ற் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி, சமநிலையில் முடிவடைந்தது.

இந்திய அணி முதல் இனிங்ஸில் 5 விக்கெட் இழப்பிற்கு 500 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதற்குப் பதிலளித்து ஆடிய நியூசிலாந்து அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 340 ஓட்டங்களை எடுத்திருந்தனர். ஒரு கட்டத்தில் 41 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய நியூசிலாந்து அணிக்கு நதன் அஸ்ரிலின் அருமையான சதமும், மக்மிலன், டானியல் விற்றோரி ஆகியோரின் அரைச்சதங்களும், மிகவும் உற்சாகத்தை அளித்ததுடன் பலோ ஒன் நிலையிலிருந்தும் அணி மீண்டது.

இரண்டாவது இன்னிங்ஸை நான்காம் நாள் தொடங்கிய இந்திய அணி ஆறு விக்கெட் இழப்பிற்கு 209 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இரண்டாவது இனிங்ஸிலும் ராவிட் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 73 ஓட்டங்களை பெற்றார். இந்திய அணி 370 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கினை நியூசிலாந்து அணிக்கு நிர்ணயித்தது.

தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி நேற்றையதினம் 84 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் என்ற நிலையில் இருந்தாலும் பின்னர் களத்திற்கு வந்த மக்மிலன், நதன் அஸ்ரில் ஆகியோரின் சிறந்த துடுப்பாட்டத்தால் 6 விக்கெட் இழப்பிற்கு 272 ஓட்டங்களையெடுத்து இந்த இருவரும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்ததுடன் இந்திய அணியின் வெற்றிக் கனவைச் சிதறடித்தனர்.

இந்த ரெஸ்ற் போட்டியில் இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், நியூசிலாந்து அணித் தலைவர் பிளமிங் ஆகியோர் சோபிக்காமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக ராகுல் ராவிட் தெரிவு செய்யப்பட்டார்.

ராஜா யாழ்ப்பாணம்.
பிரசாந், கிரண், நடித்த
வின்னர்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த
தூள்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
(சி-1618)
Tuhedo

லைடனில் மாபெரும் மலிவு விற்பனை
01.10.2003 முதல் 24.10.2003 வரை மாபெரும் மலிவு விற்பனை ஆடவர்களுக்கான சூட்டிங், சேட்டிங், பொக்ஸ் சேட்ஸ் மற்றும் நங்கையருக்கான ஸ்கேட், பிளவுஸ், சாறிகள், பஞ்சாபி வகைகள், சுடிதார், குழந்தைகளுக்கான சூட்வகைகள் மற்றும் வீட்டுக்கதவுகள், யன்னல்களுக்கான திரைச்சீலைகள் மற்றும் சகலவிதமான துணி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
சகல பொருட்களுக்கும் விசேட கழிவு உண்டு
தொலைபேசி-2222381 (சி1644)

### ஐ.நா.வில் ஆற்றிய உரை தொடர்பாக

# பிரதமர் பொதுமக்களிடம் மன்னிப்பு கோரினால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிடலாம்

### கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்க மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.நா.வில் ஆற்றிய உரையை வாபஸ் பெற்று, பகிரங்க மன்னிப்புக் கோரினால் அவர் மீது நாம் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீள் பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளோம் என, பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை பிரதமரும், அவருடன் சேர்ந்த சிலருமே தீர்மானிக்கின்றனர். இந்த விடயத்தில் வெளிநாட்டு அமைச்சும், அமைச்சரும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். இதேவேளை ஐ.நா.வில் பிரதமர் ஆற்றிய உரையை மூன்றாவது மண்டல நாடுகள் நிராகரித்துள்ளன.

மேலும் அவர் கூறுகையில்:-

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் இன்னும் ஒரு வருடத்தில் நடைபெறவுள்ளது. ஆனால் அமெரிக்க சனத்தொகையில் 37 வீதமானவர்கள் மட்டுமே ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஆதரவாகவுள்ளனர். டைம்ஸ் சஞ்சிகையில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவை உலக பொலிஸ்காரனாக அனுமதிக்க முடியாது என மலேசிய நாட்டின் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அண்மையில் மெக்சிக்கோவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பு கூட்டத்தில், இலங்கையின் சார்பில் கலந்துகொண்ட வர்த்த அமைச்சர் ரவி கருணாநாயக்கா, அமெரிக்க நலன் காக்கும் கொள்கையைக் கடைப்பிடித்ததினால் மூன்றாவது மண்டல நாடுகள் அனைத்தும் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தன.

ஆகையால் அடுத்து ஜெனிவாவில் நடைபெறும் கூட்டத்தில் - வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்காவை அனுப்பாமல், விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவை அனுப்புமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த கூட்டம் நடந்த சமயம் அதே மண்டபத்தின் ஒரு பகுதியில், சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான மாநாடொன்று நடைபெற்றது.

நோர்வே இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தது. பிரான்ஸ் உட்பட பலநாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டன. ஆனால் எமது பிரதமர் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான பிரேரணையை தயாரித்து வருகிறோம்.

தயாரித்து முடிக்கப்பட்டதும் அது குறித்து ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ், தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு என்பவற்றுடன் பேச்சுவார்ததை நடத்துவோம் என்றும் குறிப்பிட்டார்.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திருகோணமலை மூதூரில் நேற்றுமுன்தினம்-சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கி திறக்கப்பட்டபோது சாகுல் ஹமீட் மங்கள விளக்கேற்றுவதை மேலுள்ள படத்திலும், வங்கியில் வைப்பினை மேற்கொள்பவர்களைக் கீழுள்ள படத்திலும் காணலாம்.

## சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைந்தால் மகிந்த ராஜபக்ஷவின் பலத்தைக் குறைக்கவும்

### ஜனாதிபதியிடம் ஜே.வி.பி.கோருகிறது

(கொழும்பு)

மீண்டும் ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் கூட்டணி அமைக்கப்படுமானால், எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் பலத்தைக் குறைப்பதற்கு, ஜனாதிபதிக்கு நிபந்தனை விதிப்பதற்கு ஜே.வி.பியின் கீழ் இயங்கும் தேசப்பற்று மக்கள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் புதிய எதிர்க்கட்சி தலைவர் ஒருவரின் கீழ் சக்திமிக்க கட்சி ஒன்றை அமைக்க வேண்டுமென்று, தேசப்பற்று மக்கள் இயக்கம் தீர்மானம் மேற்கொண் டுள்ளது.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபகஷ - ஜே.வி.பியுடனான கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு எதிப்புத் தெரிவித்து வருவதாலேயே, ஜே.வி.பி இந்த முடிவுகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் வண்ணம், பல ஆர்ப்பாட்டப் பேரணிகள், ஊர்வலங்கள், பாதயாத்திரைகள் ஆகியன நாடுபூராவும் நடத்துவதற்கு தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்று, பாரிய வேலை நிறுத்தப் போராட்டங்களை நடாத்துவது எனவும் அந்த இயக்கம் முடிவு செய்துள்ளது.

## தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான சர்வதேச அங்கீகாரம் வலுவடைகிறது

### இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

அயர்லாந்தில் நடைபெற்ற சட்ட ஆலோசனையில் விடுதலைப் புலிகள் பங்குபற்றியதையடுத்து - முன்னரிலும் பார்க்க அவர்கள் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வை அதிகரித்துள்ளது என்றும், அதே சமயம் அனைத்துலக நாடுகளின் அங்கீகாரம் கூடுதலாகி வருவதாகவும், சர்வதேச இராஜதந்திர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அயர்லாந்தின் சின்பெயின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழைப்பின் பேரில், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் அயர்லாந்து நாடாளுமன்றத்துக்கு உத்தியோகபூர்வமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த விஜயத்தை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக சர்வதேச விமர்சகர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஒரு நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களே இவ்வாறு உத்தியோகபூர்வமாக அயர்லாந்து நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவது வழக்கம். அதே அந்தஸ்தும், மரியாதையும் விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது கவனிக்கப்பட வேண்டியது என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் -

அயர்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளுடன் நடத்திய சந்திப்பின்போது, இடைக்கால நிர்வாகத்தின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர். பொதுமக்களின் நம்பிக்கைக்கு ஏற்றவகையில் இயங்க இடைக்கால நிர்வாகம் தேவையெனவும் அயர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் நடைபெறும் இடைக்கால நிர்வாகச் சட்ட ஆலோசனை இறுதிக் கட்டத்தை அடைகின்றது.

அதற்கு முன்னர் அவசரமாக அயர்லாந்துக்கு விரைந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, அங்கு நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதனையடுத்து எரிக் சொல்ஹெய்ம் தமது உதவியாளர் ஒருவர் சகிதம், விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசனை அமர்வொன்றில் பங்கு பற்றியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச பணிக்குழுவின் தலைவர் பீட்டர் பொயில், அரசமைப்பு சட்ட நிபுணர்களான அன்ரனி றீகன், கிளெம்மக்காட்னி ஆகியோரும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் அயர்லாந்து நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தனர்.

### ஐக்கிய தேசியக் கட்சி

## பாரியளவிலான பிரசாரக் கூட்டத்தை அம்பாந்தோட்டையில் நடத்த ஏற்பாடு!

இம்மாத இறுதிப்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சி - அம்பாந்தோட்டையில் பாரிய பிரசாரக் கூட்டமொன்றை நடத்தவுள்ளது. நாட்டில் நிலவிவரும் அரசியல் சூழ்நிலைகள் - பொதுத்தேர்தல் ஒன்றுக்கு வழி அமைத்துவிடலாம் என எதிர்பார்க்கப்படுவதாலேயே, இந்தப் பிரசார நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இம்மாதம் 24 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள இப்பிரசார கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் உட்பட, ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட அறிக்கை சமர்பிக்கப்படவுள்ளது. இதற்கிடையில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஆட்சியைக் கவிழ்க்கும் விதத்தில், பாரிய திட்டமொன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தீட்டி வருவதாகவும், அதனை முறியடிக்கும் விதத்திலேயே இப்பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒக்ரோபர் மாதம் இறுதிப் பகுதியிலிருந்து, நவம்பர் மாதம் முடிவடையும்வரை, அமைச்சர்கள் எவரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக்கூடாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து அமைச்சர்களும் தத்தம் பகுதிகளில் தங்கிநின்று, பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியரால் தாக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் கல்வி நிலையமொன்றில் கற்பிக்கும் ஆசிரியரால் தாக்கப்பட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவரே தாக்கப்பட்டுள்ளார்.

அனுமதி அட்டையை எடுத்துச்செல்லத் தவறியமையாலேயே மேற்படி மாணவன் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குருநகர் பாஷையூர் பகுதிகளில் பதிவுள்ளோர் மட்டும் தங்கலாம்

(யாழ்ப்பாணம்)

குருநகர், பாஷையூர் பகுதிகளில் உள்ள வீடுகளில் குடும்ப அட்டையில் பெயருள்ளவர்கள் தவிர, வேறு எவரும் தங்க முடியாது என படையினர் கூறியுள்ளனர்.

இப்பகுதிகளுக்கு வீடுவீடாகச் சென்ற படையினர் - வீட்டுத் தலைவர்களை அழைத்து, குடும்ப அட்டைகளை பார்வையிட்டதுடன, மேலதிகமாக எவரையும் தங்க வைக்கக் கூடாது எனவும கடுமையாக எச்சரித்துள்ளனர்.

கடந்த 3ம் திகதி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள மடத்தடியில் - படையினரின் வாகனம் மோதி இருவர் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பகுதி இளைஞர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் எதிரொலியாகவே அப்பகுதிக்குச் சென்ற படையினர் பதிவுள்ளோர் மட்டுமே தங்கமுடியும் என உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

## நகையை அபகரிக்க முற்பட்ட பொலிஸை மக்கள் பிடித்தனர்

(திருகோணமலை)

திருமலை பிரதான வீதியில் வைத்து, தமிழ்ப் பெண்ணொருவரின் கழுத்திலிருந்த தங்க நகைகளை அபகரித்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் - பொது மக்களால் பிடிக்கப்பட்டு திருமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் பிரதான விதியால் சென்று கொண்டிருந்த பெண்ணிடமிருந்து, தங்க நகைகளை அபகரிக்க முற்பட்டவேளை, அப்பெண் கூச்சலிடவே, அங்கு கூடிய பொதுமக்கள்- குறித்த நபரைப் பிடித்துச் சோதனையிட்டபோது, அவரிடம் பொலிஸ் சார்ஜன்ட்டிற்குரிய அடையாள அட்டை காணப்பட்டது.

அதனையடுத்து, அந்த நபரைப் பொதுமக்கள் திருமலை அரசியற்துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்றபோது, அவரை விடுதலைப் புலிகள் ஏற்கமறுத்ததை அடுத்து, திருமலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவ்வாறு தங்க நகைகள் அபகரிக்கப்படும் சம்பவங்கள், திருமலைப் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### இளைஞரைக் காணவில்லையென முறைப்பாடு

வவுனியாவிலிருந்து யாழ்நகரில் கடந்த 6 மாதகாலமாக தங்கியிருந்து வேலை பார்த்து வந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லையென, அவரது தாயாரால் மனிதஉரிமை ஆணைக்குழுவிலும், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓட்டுமடத்தைச் சேர்ந்த ச.சுஜீந்திரன் (வயது 19) என்பவரே காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (111)

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி
# யாழ்.மாவட்டத்திற்கு ஆறு முதலிடங்கள்!

அகில இலங்கை ரீதியில், பாடசாலை மாணவர்களிடையயே நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில், யாழ். மாவட்டம் ஆறு முதலிடங்களையும், நான்கு இரண்டாம் இடங்களையும், ஒரு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற பாடசாலைகளினதும், வெற்றியீட்டிய மாணவர்க ளினதும் விபரங்கள்-

**தனி இசை** - மூன்றாம் பிரிவு. ச.சுரசாதித்தியன், சென் ஜோன்ஸ் கல்லூரி.

**தனி இசை** - ஐந்தாம் பிரிவு ம.தயாபரன், யாழ் மத்திய கல்லூரி.

**தனி நடனம்**- நான்காம் பிரிவு கு.மயூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

**தனி நடனம்**- ஐந்தாம் பிரிவு எலிசபெத் சுபத்திரா, வேம்படி மகளிர் கல்லூரி.

**நாட்டிய நாடகம்** - யாழ், இராமநாதன் கல்லூரி

**வில்லுப்பாட்டு** - வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.

இரண்டாம் இடங்களை பெற்ற பாடசாலைகளினதும், மாணவர்களினதும் விபரங்கள் -

**தமிழியற் கட்டுரை** - தி.காயததிரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.

**பாவோதல்** - இரண்டாம் பிரிவு ம.துளசி, வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி.

**பாவோதல** - ஐந்தாம் பிரிவு தே.தைசிகா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**இசைக்குழு**- இரண்டாம் பிரிவு சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்.

**மூன்றாம் இடம் -**

**தனி நடனம்**- இரண்டாம் பிரிவு தே.விதுஷன் கொக்குவில் இந்துக் கல்லூரி.

மேற்படி போட்டிகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றன. இதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள்- டிசம்பர் மாதம் வழங்கப்படும். வழமையாகப் போட்டிகள் முடிந்த கடைசி நாளன்றே, பரிசில்கள் வழங்கப்படுவது வழமையெனவும், ஆனால் இந்த வருடமே - வருடக் கடைசியில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு யாழ்.மாவட்ட செயலகத்தினூடாகவே வழங்கப்படும்

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அனைத்தும், யாழ். மாவட்டச் செயலகத்தினூடாக, இம் மாதம் தொடக்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவர்களது கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்கள் ஊடாகவே வழங்கப்பட்டு வந்ததுடன், சமுர்த்தி முகாமையாளர்களது சம்பளக் கொடுப்பனவு - கடந்த மூன்று மாத காலமாக மாவட்டச் செயலகத்தினூடாகவே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பளக் கடன் அறவீடுகள், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கழிவுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு, தேறிய தொகையே பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு - அதன் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான கடிதங்கள் யாழ்.மாவட்டச் செயலகத்தினால், பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.(113)

## போலியோ சொட்டு மருந்து இரண்டாம் கட்டம் வழங்கல்

10 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு, இரண்டாம் கட்ட போலியோ சொட்டு மருந்து எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

இந்த இரண்டாம் கட்ட சொட்டு மருந்தினை, முதலாம் கட்ட சொட்டு மருந்து பெற்ற அதே இடங்களிலேயே பெற்றுக் கொள்ளுமாறு, யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் வரை 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கே போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வந்தது. கடந்த மாதம் 20 ஆம் திகதி வழங்கப்பட்ட முதலாம் கட்ட சொட்டு மருந்து - 10 வயதுக்கு உட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டது. எனவே, சகல 10 வயதுகது உட்பட்ட குழந்தைகளையும் தமது வீடுகளுக்கு அருகிலுள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் இடங்களில் சென்று, தவறாது போலியோ சொட்டு மருந்துகளை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார. (58)

## வெள்ளைப் பிரம்பு தினம்

(சுன்னாகம்)

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரும், வாழ்வகமும் இணைந்து - பார்வையற்ற பிள்ளைகளை, மருதனார் மடத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வந்து, இந்தத் தினத்தை வெகு சிறப்பாக கொண்டாட முடிவு செய்துள்ளனர். (101)

## எழுவைதீவு பிரதான வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு பிரதான வீதி - வீதி அபிவிருத்தி சபையினரால் புனரமைக்கப்படவுள்ளது.

பாரிய குன்றும், குழியுமாகக் காணப்படும் இந்த வீதிகளைப் புனரமைப்பதற்கு, முதல் நடவடிக்கையாகக் கடந்த வாரம் - வீதி அபிவிருத்தி சபையினரால் புனரமைக்கப்படவுள்ள வீதி - அளந்து, எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் புனரமைப்பிற்குத் தேவையான பொருட்களை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

## வங்கிக் கடனை மீளளிக்காத விவசாயிகள் தொடர்ந்து கடன்பெறும் வாய்ப்பையிழந்தனர்

ஈவினைப் பிரதேச விவசாய சம்மேளனத்திற்கு உட்பட்ட விவசாயிகளில் சிலர் - பெரும்போக செய்கைக்கு இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட கடனை மீளளிக்காமையால், தொடர்ந்து கடன்பெறும் வாய்ப்பை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் பெரும்போகச் செய்கைக்கென, சுன்னாகம் இலங்கை வங்கி - இந்தப் பகுதியில் 15 விவசாயப்பயனாளிகளுக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம், குறைந்த வட்டி வீதத்துடன் கடன் வழங்கியது. மீண்டும் அவற்றை இந்த வருட ஆரம்பத்திலேயே மீளளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இதில், 10 விவசாயப் பயனாளிகள் உரியகாலத்தில் கடனை மீளளித்தனர். மற்றைய ஐவரும் இதுவரை கடனை மீளளிக்கவில்லை என்றும், இவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அப் பகுதி விவசாய சம்மேளனச் செயலாளர் க.இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப்பயனாளிகள் கடனை மீளளிக்காமையாலேயே, மீண்டும் இப் பிரதேச விவசாயிகள் இலங்கை வங்கியில் கடன் பெறும் வாய்ப்பை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (83)



2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16 ஆவது நினைவு தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்தி - வலிகாமத்திலிருந்து புறப்படுமுன், சுன்னாகம் பல. நோ.கூ.சங்க முன்றலில் சங்கத் தலைவர் சீ.குமரவேல், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தி,, பவனியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## வடமராட்சி பாடசாலைகளுக்கான தாச்சிப் போட்டி

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில், அண்மையில் நடைபெற்ற வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான - 11 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான தாச்சிப் போட்டியில் -

ஆண்கள் பிரிவில் - அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் 1 ஆம் இடத்தையும், புற்றளை மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தையும், புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் - இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம 1 ஆம் இடத்தையும், திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் 2 ஆம் இடத்தையும், கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இந்தப் போட்டியில் 10 பாடசாலைகள் பங்குபற்றியதாக, உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (116)

## கணினிகள் அன்பளிப்பு

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் - பழைய மாணவன் கே. என்.நித்தியானந்தன் தனது கல்லூரியில் கணினிக் கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நோர்வேயிலிருந்து 22 கணினிகளை கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளாரென கல்லூரி அதிபர் கிருபராஜா தெரிவித்தார்.

## இலக்கிய பேரவையினால் பரிசு பெற தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர்கள்

இவ்வருடம் நடைபெறவுள்ள இலங்கை இலக்கியப் பேரவையின் வருடாந்த விழாவில், இலக்கியத் துறையில் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ள மேலும் ஒருதொகுதி எழுத்தாளர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன

**கவிதை**

வடலி - சி.சிவசேகரம் (1999), இயல்பினை அவாவுதல் - அமரதாஸ் (1999), மீண்டும் வசிப்பதற்காக - மேமன் கவி (1999), கனவுகளின் எல்லை - த.ஜெயசீலன் (2001), புள்ளிகளில் சில புள்ளிகள் - இக்பால அலி (2001), ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள் - ச.வே.பஞ்சாட்சரம் (2002)

**காவியம்**

ஜின்னாஹ்வின் இரு குறுங்காவியங்கள் - ஜின்னா சரிபுத்தீன் (1997), யாழ்ப்பாணக் காவியம் - க.சச்சிதானந்தன் (1998)

**நாடகம்**

சங்கடங்கள் - இ.முருகையன் (2000), மானிடம் சாகவில்லை - எஸ்.முத்துமீரான் (2001), எங்கள் நாடு - அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை (2002).

**சிறுவர் இலக்கியம்**

பூதத்தீவுப் புதிர்கள் - செங்கை ஆழியான் (1997),

**சிறுவர் நாடகங்கள்** -

வி.என்.எஸ்.உதயச்சந்திரன் (2000), நரியின் தந்திரம் - ஓ.கே.குணநாதன் (2000), பயங்கொள்ளலாகாது பாப்பா - ச.அருளானந்தம் (2000), காற்றின் குழந்தைகள் - செ.யோகநாதன் (2001), குயில்கள் - கோகிலா மகேந்திரன் (2001), தங்கமுடிப் பூனையார் - செ.சத்யன் (2002)

**பல்துறை**

எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் - டொமினிக் ஜீவா (சுயசரிதை 1999), ஈழமண்ணில் ஒரு இந்தியச்சிறை -எஸ்.எம்.கோபாலரத்தினம் (2000 சமகாலவரலாறு), கார்ட்டுன் ஓவிய உலகில் நான் - சிரித்திரன் சுந்தர் (2001), ஆபிரிக்கக் கவிதைகள் - சோ.பத்மநாதன் (2001 தமிழ்க் கவிதைகள்), வாழ்வற்ற வாழ்வு - சி.வி.வேலுப்பிள்ளை தமிழாக்கம் - சாரல்நாடன் (தமிழாக்க நாவல்), வடிவில்லாத வாத்துக்குஞ்சு - செ.யோகநாதன் (2002 தமிழாக்க சிறுவர் கதை)

இலங்கை இலக்கியப் பேரவையின் இவ்வருட விழாவில் இவர்கள் கௌரவிக்கப்பட்டு, பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக -இலக்கியப் பேரவையின் தெரிவித்துள்ளனர்.

## லயன்ஸ் கழக ஆதரவில் பனம் விதை நடுகைத் திட்டம்

சுன்னாகம் லயன்ஸ் கழக ஆதரவில், அப்பிரதேசத்திலுள்ள குளங்களுக்கு அருகில் - பனம்விதை நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக கந்தரோடை குண்டுக் குளத்தின் அருகில் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் ஏ.சிவசுவாமி ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து அருகிலுள்ள ஏனைய குளக்கரைகளிலும், ஏனைய இடங்களிலும் பனைவிதைகள் நாட்டப்படும் என, அங்கு வருகை தந்த லயன்ஸ் பிராந்தியத் தலைவர் டாக்டர் வி.யோகேஸ்வரன் தெரிவித்தார். (101)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : க.துவாரகன்
முகவரி : உச்சில் ஒழுங்கை, கரவெட்டி.



நான்காவது அகவையில்



பெயர் : பே.நிரேதன்
முகவரி : கிழக்கு வளவு, மல்லாகம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

நீண்டு பரந்திருந்த வெளிப்பிரதேசத்தை அண்மியதான குடியிருப்புப் பகுதியில், தரையிலிருந்த காவலரணின் கூட்டுக்குள் இருந்தாள் மல்காந்தி.

காலையில் தமது விவசாயப் பொருட்களுடன் செல்லும் அக்குடியிருப்பு மக்களின் பொட்டலங்களைப் பரிசோதித்துவிட எப்படி

# நியாய சங்கேதங்கள்

இரண்டாம் பரிசு சிறுகதை

யும் ஒரு மணித்தியாலமாவது செல்லும.

அன்றொருநாள் காவலரணுக்கு அருகிலிருக்கும் ரவீந்திரனை - குணவர்த்தன சோதனை செய்தவிதம் மல்காந்திக்கு துளிகூட பிடிக்கவில்லை. ரவீந்திரனின் கத்தரிக்காய் மூடையைப் பிரித்துக்கொட்டிய குணவர்த்தன, அவனிடம் விசேட அடையாள அட்டையைக் கேட்டான். பொக்கெற்றுக்குள் கையைவிட்ட பின்புதான், ரவீந்திரன் அடையாள அட்டையை விட்டுவிட்டு வந்ததை உணர்ந்தான். அதை மெதுவாகச் சொன்னபோது குணவர்த்தன கொதித்தெழுந்தான்.

'ரவி எனக்குத் தெரிந்தவர். இப்பாதையால் தினமும் செல்பவர். அதைவிட அவரது குடும்பத்தை எனக்குத் தெரியும். வீட்டைபோய் ஐ.சியை எடுத்துவர விடு' என்றாள் மல்காந்தி.

குணவர்த்தன கெட்டவார்த்தைகளால் அவளை ஏசினான் 'உன்னை அம்மா தமிழனுக்குத்தான் பெற்றிருக்கிறாள்'.

மல்காந்திக்குக் கோபம் வரவில்லை. அமைதியாகச் சொன்னாள் - 'நாம் வாழுகின்ற சிங்களப் பிரதேசங்களில் நடக்கின்ற கொலை, கொள்ளை , குண்டுவெடிப்புகளுக்கெலாம் தமிழர்கள்தான் காரணம் என்று நீ நினைக்கிறாயா...?'

குணவர்த்தன ஆத்திரத்துடன் பல்லை நெருமினான். 'மகளே தமிழனுக்குச் சப்போட் பண்ணுறியா? உன்னைச் சுடுவேன்' சிங்களத்தில் ஏசியவாறு துவக்கைத் தூக்கினான். நிலைமையை அவதானித்த அருகில் நின்ற சிப்பாய்கள்- ஓடிவந்து அவனைப் பிடித்தனர், நீ என்னைச் சுடுவதானால் சுடு, பரவாயில்லை. ஆனால், கண்மூடித்தனமாக நடந்து கொள்ளாதே. நீயும், நானும் பரம ஏழைகள். அதனால், பிழைப்பிற்காக இராணுவத்தில் சேர்ந்தோம். எமது ஊரிலுள்ள பணக்காரர்கள், அரசியல் செல்வாக்குள்ளவர்கள், அரசியல்வாதிகளின் பிள்ளைகள் யாராவது இராணுவத்தில் சேர்ந்துள்ளனரா? அவர்கள் எல்லோரும் வசதியாக வாழுகின்றார்கள். வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றார்கள். இங்குள்ள அரசியல்வாதிகள் தமது பிழைப்பை நடத்த வகுப்புவாதத்தைக் கிண்டிவிடுகிறார்கள். எமக்குள்ள உரிமை அவர்களுக்கில்லை என்று சொல்லும்போது, ஆட்சியிலுள்ளவர்கள் ஏன் சிந்தித்துப் பார்க்கக்கூடாது. ஆயிரம் வருடங்களுக்கு முன்பு துட்டகைமுனு சொன்னதையே இன்னும் சொன்னால் எப்படியிருக்கும்.

'எமது ஊரில் வசதியானவர்கள், பணக்காரர்கள், அரசியல் செல்வாக்குள்ளவர்களில் சிலர் செய்யும் அட்டூழியங்கள் - அப்பாவி மக்கள் மீது சுமத்தப்படுகின்றது. ஏன் என்னையே எடுத்துக்கொள்ளுங்கள்...' மல்காந்தி அமைதியாகக் கூறினாள்.

'உனக்கு என்ன நடந்தது' ஆவேசமாக் கேட்டான்

## இலக்கியச்சோலை

குணவர்த்தன. மல்காந்தி மெதுவாக் கண்ணை மூடினாள். அவளது கண்களுக்குள் குளிர்மையான அவளது கிராமம் தெரிந்தது. அவளது தந்தை தச்சுவேலைத் தொழிலாளி. நான்கு பெண்பிள்ளைகள் - மூத்தவள்தான் மல்காந்தி. தாய் கடைசி மகள் பிறந்தபோது, பத்துமைல்களுக்கப்பால் உள்ள பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வசதியின்மையால் இறந்தாள். அவளுக்கு இருபது வயதாகும்போது, தகப்பன் வாகன விபத்தொன்றில் முடமாகிக் காலில்லாது வீட்டில் இருக்கிறார்.

அவள் ஏ.எல் வரை படித்தவள், தனது சான்றிதழ்களோடு ஆசிரிய வேலைக்காக அலைந்து திரிந்தாள். வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர் நியமனம்கூட அவளுக்குக் கிடைக்கவில்லை.

பெரிய பெரிய பணக்காரரெல்லாம் அவளுக்குப் பணத்துடன் தொழில்கொடுக்க முன்வந்தபோது, பரிசாக அவளைக் கேட்டனர்.

அவள் வேலைதேடிச் சென்றபோது, அவளுக்கு மாணிக்கக்கல் வியாபாரியான சில்வா வேலை கொடுத்தான். மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளம். தேவையேற்படின் இரவும் நிற்கவேண்டும் என்ற நிபந்தனை. முதலில் அவள் பயந்தாள். பின் அங்கு பெண்கள் தங்குவதைக் கண்டு தங்கினாள்.

சில்வாவின் மகன் பிரசன்னா - அவளைச் சுற்றிச் சுற்றி வந்து, வலியக் காதலித்தான். காதல் வசனங்கள் பேசினான். அதில், அவள் மயங்கியபோது, ஒருநாள் இரவு அவன் - அவள் தங்கியிருக்கும் அறைக்கு வந்தான். அவளுடன் தங்கியிருந்த மல்லிகா விசயமறிந்து விலகிச் சென்றாள்.

மல்காந்தி மறுத்தபோது, பிரசன்னா பலாத்காரமாக அவளுடன் உறவுகொண்டான். மறுநாள் அவள் சில்வாவிடம் நியாயம் கோரியபோது, சில்வா அவளை வேலையிலிருந்து நீக்கினார். அவள் பொலிஸுக்குச் சென்றாள். பொலிஸ்காரர் சிரித்தனர். அவளால் பிரசன்னாவை நெருங்க முடியவில்லை. கவலையுடன் வேலைதேடிய அவள் - வாழவழியில்லாமல் இராணுவத்தில் சேர்ந்தாள்.

கண்களால் வழியும் கண்ணீரைக்கூடத் துடைக்க முடியாது நின்ற மல்காந்தியை, முதன்முதலாக அனுதாபத்துடன் பார்த்தான் குணவர்த்தன. அவனது இதயத்துள் லேசான ஓர் ஒளி தென்பட்டது.

"சிங்களவர்களில் வசதியானவர்கள், பணக்காரர்கள் பிரச்சினைகளின்றி வாழ்கிறார்கள். வடபுலத்தில் நடைபெறும் போரை உற்சாகப்படுத்தி, தம் குடும்பத்தை வளர்க்கிறார்கள். இவர்களுக்குச் சமாதானத்தைப்பற்றி அக்கறை இல்லை."

குணவர்த்தன யோசித்துப் பார்த்தான். "மல்காந்தி சொல்வது எவ்வளவு உண்மை. இந்த அப்பாவி மக்களை நான் வீணாகப் பழிவாங்குகிறேனா....?"

"மல் .... என்ன கடும் யோசனை...?"

திடுக்கிட்டுத் திரும்பினாள் மல்காந்தி. எதிரே புன்முறுவலுடன் குணவர்த்தன கையில் பிளாஸ்க்குடன் நின்றான்.

அந்த இராணுவக் காவலரணுக்கு அருகில் சுந்தரலிங்கம் என்ற வயோதிபர் வாழ்கிறார். தொண்ணூற்றைந்தாம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று, திரும்பி வந்தபின், மிதிவெடியில் அகப்பட்டு தனது வலது காலை இழந்தார்.

அவருடன் வயோதிப மனைவியும், நாற்பதத்தைந்து வயதைக் கடந்தும் திருமணமாகாத மகளும், திரும ணமாகிக் கணவனை இழந்து, இரண்டு பிள்ளைகளுடன் வாழும் மகளும், இப்பிரச்சினையால் சித்தசுவாதீனமடைந்த இருபது வயது மகனும் இருக்கிறார்கள். ஒருவருக்கும் தொழில் இல்லை. அரசாங்கம் கொடுக்கும் நிவாரணம், மகள் வீடுகளில் கூலிவேலை செய்வதால் கிடைக்கும் எஞ்சிய உணவும், சிறுதொகைப் பணமுமே அவர்களது குடும்பத்தை ஓட்டுவது.

மல்காந்தி - சுற்றிவளைப்பின்போது ஒரு நாள் அங்கு வந்தாள். சுந்தரலிங்கம் பயந்துபோனார். பீதியுடன் நின்ற சுந்தரலிங்கத்தைக் கண்டதும், மல்காந்தியின் கண்கள் கலங்கின. அரைகுறைத் தமிழில் அவள் சொன்னாள் "பயப்பிடுறது இல்லை. நான் உங்கள் மவள் மாதிரி.. தேநீர் கொஞ்சம் சரிக்கட்டித் தரமுடியுமா...?" என்றவாறு தான் கொண்டுவந்த தேயிலையையும், சீனியையும் கொடுத்தாள். சுந்தரலிங்கம் பயத்துடன் அதைவாங்கி, தயாரித்துக் கொடுத்தார். அதன்பின், சென்ரியால் சுந்தரலிங்கம் சென்றுவரும் போது, மல்காந்தி அவருடன் கதைப்பாள்.



ஒருநாள் சுந்தரலிங்கம் கேட்டார், "இரவிலை எம்மால் வெளியே செல்ல முடியாமல் இருக்கு. பகலிலை சென்றாலும் பலதடைகள், விசாரணைகள், சோதனைகள். ஒரு மணித்தியாயத்திலை போய்வாற யாழ்ப்பாணத்திற்கு - ஒருநாள் தேவையாயிருக்கு. வயது போனவர்களையும் சோதிககினை... சுற்றிவளைப்பிலை கைது செய்யினை... இது நியாயமே... ?"

அதைக்கேட்டுமல்காந்தி சிரித்தாள். "தாத்தா... இந்த நிலைமை யாழ்ப்பாணத்திலை மட்டுமில்லை, இலங்கை பூரா இருக்கு. இலங்கையிலை எந்த இடத்திலையும் பாதுகாப்பில்லை. இலங்கை பூரா இதே நிலைமை தான்..."

"சிங்களப் பகுதிகளி லுமா...?"

"ஓம்... இங்கே இருக்கிறதிலும் பார்க்க, சிங்களப் பிரதேசத்திலை இருக்கிறதுதான் பயம். எந்த இடத்திலை எப்ப குண்டு வெடிக்குமெண்டு சொல்லமுடியாது. என்னுடைய பெரியம்மாவினுடைய மகன் வேலைக்குப் போனவர். வீட்டை திரும்பேல்லை. கண்டியிலைதான் அவர் வேலை செய்தார். கொழும்பிலைதான் குண்டு வெடித்தது. ஆனால், ஆறுமாசம் கடந்தும் அவர் வீட்டை வரேல்லை. நாங்கள் வேலைத்தளத்தில் விசாரித்தபோது, அன்று அவர் லீவு பெறுவதற்காகக் கடிதம் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய நண்பனுக்குச் சொல்லியிருக்கிறார். கொழும்பிலை ஓர் அவசர வேலை இருக்கெண்டு..." மல்காந்தி விம்மினாள்.

சுந்தரலிங்கம் வியப்புக் கலந்த அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

என்னுடைய பெரியம்மாவினுடைய மகன் கொழும்புக் குண்டு வெடிப்பில் இறந்ததாய்த்தான் நாங்கள் கருதிறம். இறப்பு என்பது நிச்சயிக்கப்பட்டது. துன்பங்கள்தான் வாழ்க்கை. இன்பமென்பது மின்னலைப்போன்றது. இப்படிப் புத்தபெருமான் சொல்லிய கருத்துக்களைச் சிந்தித்துப் பார்த்திட்டுத்தான், நான் படையிலை சேர்ந்தனான். இதாலை என்னுடைய தகப்பனாரும், சகோதரிகளும் ஓரளவாவது உண்டு, உடுத்து வாழினை... என்னுடைய இளைய தங்கை ஒருத்தி பல்கலைக்கழகத்திலை படிக்க முடிஞ்சுது".

சுந்தரலிங்கம் எதுவும் பேசத்தோன்றாது சிலையாக இருந்தார்.

"சிறுபான்மை இனம் என்பது ஒரு நாட்டிலை வாழுற இனங்களிலை குறைந்த சனத்தொகையை உடைய இனமென்றே நீங்கள் கருதுறியள்...?" கேட்டுவிட்டு, சுந்தரலிங்கத்தின் முகத்தைப் பார்த்தாள்.

சுந்தரலிங்கத்திற்கு அவளது கேள்வி புரியவில்லை. அதைப் புரிந்துகொள்ளுமளவிற்கு அவர் கற்கவும் இல்லை. "அப்படித் தானே ஊரிலை கதைக்கினை...".

"இலங்கையிலை பெரும்பான்மையாய் வாழுற சிங்களவருக்குள்ளேயே சிறுபான்மை இனம் இருக்கு. சாதியாலை, பணத்தாலை, மதத்தாலை, அரசியல் செல்வாக்கு இல்லாததாலை ஒரு சிறுபான்மை இனம் உருவாகியிருக்கு. சிங்கள கிறீஸ்தவர்களை - பௌத்த சிங்களவர்கள் சிறுபான்மை இனமாய்த்தான் நினைக்கினை. பணமில்லாதவன் சொந்தச் சகோதரனானாலும் மதிக்கிறேல்லை. என்னுடைய அம்மான்ரை அண்ணன் டொக்ரராய் இருக்கிறார். பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டிலை. எங்களை அவருக்குத் தெரியாது. பணக்காரர், அரசியல் செல்வாக்குள்ளவர்கள், படித்தவர்களெல்லாம் போரைக் காரணங்காட்டி, வெளிநாட்டிற்குச் சென்று, பிரசாரப் போர் செய்யினை. எங்களைப் போன்ற வாழ வழியில்லாதவைதான், இஞ்சை இருந்து தாய் நாட்டைக் காக்கிறதாய்ச் சொல்லி வயித்தை வளர்க்கிறம்..."

"இவ்வளவு பெரிய பிரச்சினையெல்லாம் சிங்கள நாட்டிலை இருக்கா?" என்று யோசித்தார் சுந்தரலிங்கம்.

"கனபேருக்குச் சமாதானம் வாறது விருப்பமில்லை. தர்மத்தைப் போதிக்கின்ற புத்த குருமாரே- சமாதானத்துக்குத் தடையாய் இருக்கினை... அரசியல் வாதிகளும், புத்தகுருமாரும் நினைத்தால், ஓரிரு நாட்களில் சமாதானத்தை உண்டு பண்ணி, மக்களின் வாழ்வை மேம்படுத்தலாம். ஆனால், அதற்குப் பிறகு அவர்களுக்குத் வேலையில்லாமல் போய்விடும்...

தொண்ணூற்றைந்தாம் ஆண்டுக்கு முன்பு உங்கடை ஊரிலை கட்டுப்பாடு இருந்தது, ஒழுக்கம் இருந்தது, தனிமனித சுதந்திரம் இருந்தது, அநியாயங்கள் செய்யப் பயம் இருந்தது, பெண்கள் மதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்த பின்பும், தவறு செய்தால் அவர்கள் வந்து தண்டித்து விடுவார்கள் என்ற பயம் இருந்தது. இப்ப இந்த ஊர் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கு."

மல்காந்தி சொல்வதில் எவ்வளவு அர்த்தம் இருக்கு.

முன்பு பேச்சுவார்த்தைக்காக எத்தனையோதரம் அமைச்சர்கள் வந்து போயும், சமாதானம் ஏற்படவில்லை. அவள் சொல்வது எவ்வளவு உண்மையானது. எமது ஊரைச் சரியாகப் புரிந்து வைத்துள்ளாள். இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்பும், தீயதைச் செய்பவர் பயப்பட்டனர். இன்று குடாநாடு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

"என்ன தாத்தா யோசிக்கிறியள்...?"

"நீ சொன்னதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தன்" என்றார் சுந்தரலிங்கம்.

இன்றைய இந்தச் சூழலிலை மனித வாழ்க்கையிலை, அக்கறைகொண்ட யாராவது ஒருவர் தலையிட்டுத்தான் தீர்த்து வைக்கவேண்டும். எமது இனத்தைப் பொறுத்த மட்டிலை, இவ்வளவு காலமும் மனித வாழ்க்கையிலை அக்கறை கொண்டவர்கள் இருந்திருக்கின. ஆனால், அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களும் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை. எம்மைப் போன்றவர்களாலை என்ன செய்யமுடியும்.

இன்னொரு நாள் சுந்தரலிங்கம் சென்ரியால் செல்லும் போது, மல் காந்தி புன்னகைத்தாள். "ஒரு மாசமாய் உங்களைக் காணேல்லை. வேறை இடத்திற்கு மாறிவிட்டார்களோ என்று நினைத்தேன்." என்றார் சுந்தரலிங்கம். "மூன்று வருடங்களாய் லீவுக்கு விண்ணப்பித்தனான் - கிடைக்கவில்லை. திடீரென்று அப்பா இறந்திடார். அதாலை லீவு கிடைச்சது, போயிட்டேன்". வேதனையோடு சொன்னாள்.

## சிறுகதை

"அப்பா இறந்திட்டாரா... ஐயையோ... என்ன நடந்தது..."

"விபத்திலை காலை இழந்தவர் தானே... அத்தோடை டயபற்றிக்." கண்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள் மல்காந்தி.

"அப்ப, தங்கச்சிமாருக்கு ஆர் துணை...?"

விரக்தியாகச் சிரித்தாள் மல்காந்தி. "இரண்டு பேர் வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்குப் போறவை. கடைசித் தங்கச்சி பல்கலைக்கழகத்திலை படிக்கிறாள். எங்கடை ஊரிலை ஓர் இளம் பெண் இரவிலை வேலை முடித்து வீட்டுக்கு வருவதும், வீட்டிலை தனிய இருப்பதும் மிகவும் பயங்கரமானது. அதாலை நான் இரண்டு தங்கச்சிமாரையும் இராணுவத்திலேயே சேரச்சொல்லிப்போட்டு வந்தனான்."

அதிர்ச்சியுடன் சுந்தரலிங்கம் மல்காந்தியைப் பார்த்தார்.

"சட்டம், ஒழுங்கு, கோடு, கச்சேரி, பொலிஸ், இராணுவமெல்லாம் அங்கு இருக்கிறபோதும், இவற்றை ஏமாற்றுகிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் போர் நடைபெற்ற விஷச்சூழலைப் பயன்படுத்தி - அக்கிரமங்களையும் அநியாயங்களையும் செய்கிறார்கள். அவர்களைத் திருத்த முடியாது. அதோடை, திருந்தவும் மாட்டார்கள், திருத்தவும் அவர்களைத் தலைவர்கள் விடமாட்டார்கள். ஒவ்வெருவனும் தனக்குத் தனக்கென ஓர் இளைஞர் படையை அமைத்து, தமது காரியங்களைச் செய்கிறார்கள். எதிரியென்று நினைப்பவர்களைப் பயமுறுத்துகிறார்கள். அதற்காக அவர்களுக்கு வலிமையுள்ள கோஷ்டி தேவைப்படுகின்றது. அக் கோஷ்டிகள் இவர்களை விழுங்கிவிட்டன. அதனால், அவர்களால் எதுகும் செய்ய முடிவதில்லை. இந்த முறை மாறவேண்டும். சமாதானத்தை வரவழைப்போம். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோமெனக்கூறி, மாறிமாறி அரசமைப்போர் ஆட்சிக்கு வந்ததும், சொன்னவற்றை மறந்து, தத்தமது குடும்ப நலன்களைக் கவனிக்கிறார்கள்.


இந்தப் போர் முடியவேணும் தாத்தா. இதாலை முழு இலங்கையுமே பாதிக்கப்பட்டிருக்கு. இந்த நாட்டிலை வாழுகின்ற ஒவ்வொருவனதும் மனமும் - போராலை சிதைவடைந்திருக்கு. இப்பொழுது நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. தீர்க்கதரிசன[illegible]க்க பெரும் வீரரான உங்கள் தலைவர் - சமாதானத்திற்குகான கதவுகளைத் திறந்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தை அரசியல்வாதிகளும், புத்த குருமாரும் நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும். இல்லையென்றால், உங்களுகென்று ஒரு நாடு உருவாகும். அதுதான் நியாயம். போர் முடிந்து சமாதானம் வரவேண்மென்று நாங்கள் எல்லோரும் பிராத்திப்போம். இதைத்தவிர எங்களாலை ஒண்டும் செய்யமுடியாது."

சுந்தரலிங்கம் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றார். "இராணுவச் சிப்பாய்களும் ஏழை மக்களும் இதைத்தான் விரும்புகிறார்களோ...? அப்போ பணக்காரர்களுக்கா யுத்தம்...? சிந்திக்கமுடியவில்லை."

**கே.வி.குணசேகரம்**

# நூல் அகம்

## செந்தமிழ் இலக்கண விளக்கம்




செந்தமிழ் இலக்கண விளக்கம் இரண்டாம் பாகம் எனும் ஒரு நூல், தமிழிலக்கண உலகிற்குப் புதியதொரு வரவாகக் கிடைத்துள்ளது. இதனை அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கம் எழுதியுள்ளார். இந்த நூலின் முதற்பாகம் முன்னரே வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் பாகத்தின் - முதற்பகுதியே தற்போது வெளியாகியுள்ளது. இதில் செய்யுளியலும், அணியியலும் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. க.பொ.த (உ/த) பிரிவில் தமிழ் மொழியைப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கும், ஆசிரிய கலாசாலையில் தமிழ்மொழி கற்கும் ஆசிரிய மாணவர்களுக்கும், சித்தாந்த பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் பெரிதும் உதவக்கூடிய வகையிலே இந்நூல் அமைந்துள்ளதென, நூலிற்கு மதிப்புரை வழங்கியுள்ள அருட்கவி சி.வ.விநாசித்தம்பிப் புலவர் தெரிவித்துள்ளார்.

முதுபெரும் புலவர் கை.க.சிற்றம்பலத்தின் ஆசிரிய விருத்தத்தில் அமைந்த ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந்நூல், அடுத்து பண்டிதர் சி.அப்புத்துரையின் ஆசிரியுரையைக் கொண்டுள்ளது. நூலிற்கான அணிந்துரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா வழங்கியுள்ளார். அவரோடு பண்டிதர் க.மயில்வாகனாரும் அணிந்துரையை வழங்கியுள்ளார். அடுத்து நூலாசிரியர் உரை இடம் பெற்றுள்ளது.

முந்நூறுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகத்தில், முதல் விடயமாகச் செய்யுளியல் பற்றிய அறிமுகம் இடம் பெற்றுள்ளது. அதனுள் செய்யுளின் உறுப்புக்கள் பற்றி மேலோட்டமாகப் பேசப்பட்டுள்ளது. அடுத்து வரும் பகுதிகளிலேயே மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல் ஆகிய செய்யுள் உறுப்புக்களை முக்கியப்படுத்தியும் வண்ணம், வனப்பு, தளை ஆகிய உறுப்புக்களையும் சேர்த்து, பதினைந்து செய்யுள் உறுப்புக்கள் பற்றித் தெளிவாகவும், ஆழமாகவும் அதேவேளை, இலகுவான முறையிலும் விபரிக்கப்பட்டுள்ளது.

செய்யுள் உறுப்புக்கள் பற்றி விளக்கி முடிவடைந்த பிறபாடு, சில வகைச் செய்யுள்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, கலிவெண்பா, கொச்சகக் கலிப்பா, வஞ்சிப்பா எனும் செய்யுள் வகைகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கிடையே கலிப்பா பற்றிய தொல்காப்பியருடைய கருத்தும், பிற ஆசிரியர்களுடைய கருத்தும் ஆராயப்பட்டுள்ளமை நூலிற்குச் சிறப்பாக அமைகிறது.

செய்யுள் உறுப்புக்கள் பற்றி ஆராயும்போது - தளை, சீர் ஆகிய உறுப்புக்களின் உபபிரிவுகள் பற்றியும், காலத்திற்குத் தேவையான அளவிலே விதந்துரைக்கப்பட்டுள்ளது. உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் உதாரணம் காட்டுவதற்குத் தொல்காப்பியருடைய தொல்காப்பியப் பாடல்களும், மாணிக்கவாசகருடைய திருவாசகப் பாடல்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

செய்யுளியலின் இறுதி விடயமாகப் பாட்டியலின் சில வடிவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இருபா இருப˙.து, இணைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, நவமணிமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து, ஆற்றுப்படை, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், பள்ளு ஆகிய பாடல் வகைகளைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

அணியியல் தொடர்பான விடயங்கள், அணியியல் பற்றிய ஓர் அறிமுகம் என்பதுடன் ஆரம்பமாகிறது. இதில் அணியிலக்கண நோக்கில், செய்யுளியல் எவ்வாறு அமைகிறது என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதில்கூடப் பல்வேறு உதாரணப்பாடல்களைக் கையாண்[illegible]ளமையைக் காண முடிகிறது.

அடுத்து, பொருளணிகள் எனும் தலைப்பிலே உவமையணி, உருவகவணி, தீவகவணி, பின்வருநிலையணி, விலக்கணி முதலாய முப்பத்தைந்து அணிவகைகள் பற்றி ஆழமாக எழுதப்பட்டுள்ளது. சொல்லணி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் "மடக்குகள்" எனப்படும் செய்யுளிலக்கண விடயம் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

நூலின் இறுதி விடயமாகச் சித்திரக்கவி எனும் பகுதி இடம் பெற்றுள்ளது. அதில் பன்னிரண்டு வகையான சித்திரக்கவி வகைகள் குறித்துப் பேசப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்நூலில் செய்யுளியல் பற்றியும், அணியியல் பற்றியும் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது என்று கூறமுடியும்.

**இ.சர்வேஸ்.**

# கிழக்கும் மேற்கும்

## ஆருணி - கான்சு



ஒரு சிறு பையன் கிழக்கினில் அன்று
குருபக்தி யினிலே சிறந்து நின்றான்!
ஒரு சிறு பையன் மேற்கினில் அன்று
தேசபக்தி யினிலே உயர்ந்து நின்றான்!

தவத்தினில் உயர்ந்த தௌமிய முனிவரின்
குருகுலத் தினிலே சிறுவர்கள் பலருடன்
ஆருணி எனுமோர் சிறுவனும் பயின்றான்!
குருகுலத் தினிலே வழமைபோல் ஒருநாள்
சிறுவர் எல்லோரையும் தம்முன்னே அமர்த்திப்
பாட மொன்றினை விளக்கினார் முனிவர்!
வானம் திடீரெனக் கறுத்துக் கொண்டது!
பொழியத் தொடங்கிய மழையின் கொடுமையால்
முனிவர்முன் இருந்த சிறுவர் யாவரும்
தத்தம் பணிசெய்ய எழும்பி ஓடினர்!
ஆருணி மட்டும் ஓடினானில்லை!
தன்குரு வுடைய வயல் வரப்பினிலே
தான்கண்ட சிறியதோர் உடைப்பைப் பற்றியே
ஆருணியின் மனம் கவலை கொண்டது!
"பொழியும் மழைக்குப் பெருகும் வெள்ளமோ
வரப்பினை அழிக்கும்; வயலும் பயிர்களும்
அழியும்" என்றவன் எண்ணிக் கொண்டதும்
அவன்தன் குருவிடம் விரைந்து சென்றவன்
வயலின் நிலையினை விளக்கிச் சொன்னான்!
வயலுக்குச் செல்ல அனுமதி கேட்கவே
குருவும் அவனுக்கு அனுமதி தந்தார்!
புயலென விரைந்தான் வயலினை நோக்கி!
மழையோ தொடர்ந்து சோவெனப் பொழிந்தது!
வயலை அடைந்தவன் உடைப்பைப் பார்த்தான்!
மண்ணை உருட்டி உருட்டி எடுத்து
வரப்பின் உடைப்பில் போட்டான் தொடர்ந்து!
பெருகிடும் வெள்ளம் அவன் போடும் மண்ணைக்
கரைத்துச் சென்றதால் உடைப்பு வளர்ந்தது!
அடைத்தலும் கரைதலும் நடந்தது தொடர்ந்து!
ஆயினும் அவன் மனம் கலங்கிட வில்லை!
"அடுத்தென்ன செய்வது?" என்றே ஆருணி
கணப்பொழு தேதான் சிந்தனை செய்தான்!
வெள்ளம் பெருகிடும் உடைப்பின் குறுக்கே
படுத்துக் கொண்டான் தடுப்பாரின்றியே!
வயலின் உடைப்பு அடைபட்டுக் கொண்டது!
பெருகிய வெள்ளமும் தடைப்பட்டு நின்றது!
அழிவிலி ருந்தவன் வயலைக் காத்தான்!
பொழிந்த பேய்மழை சிறிது நேரத்தில்
மெல்ல மெல்லத் தணிந்து நின்றது!

**முருகு**

(தொடரும்)

## கடலிலே கரைந்தபோது...



கடல் தாலாட்டாய்
அசைத்தபோது
உன்படகு
விரைந்து கொண்டிருந்தது.
சிரித்த சிரிப்புடனேயே!
உனது இலக்கை நோக்கி
சீறிக் கொண்டிருந்தாய்.
உனக்குத் தெரியும்
என்ன நடக்கப் போகிறதென்பது.
இருந்த பொழுதிலும்
உன் மலர்வதனம்
சூரியனின் பிரகாசம் போல்
ஒளி வீசிக்கொண்டே
நகர்ந்து போனது.
சில விநாடியின் பின்
வெடியோசை அதிர்ந்து
கப்பல் துகள்களானபோது
கடல் செந்நிறமாயிற்று.
நீ!
கடலிலே கரைந்துபோனாய்.
உனது சிரிப்புமட்டும்
கடலின் மேற்பரப்பில்
அகலத் தெரிந்தது.
மறுகணம்
உன் பிரிவுக்காக
வெள்ளியாய்
நுரைகடல் எழுந்து
அழத் தொடங்கியது
நாங்களும்தான்.

**அ.சூரியன்**
**ஊறணி**

# கவிதைச் சோலை

## கொடூரம்



என்றோ
என் வீட்டுச் சுவரில்
நான்
வரைந்து சென்ற
ஓர்
இளநங்கையின் ஓவியம்
இன்று
என்னைப் பார்த்து
அழுகிறது.
அதன் ஆடைகள்
அழிக்கப்பட்டு
அங்கங்களின் வர்ணங்கள்
சுரண்டப்பட்டு
அருவருப்பாய் ...
அதற்கு
அன்று நான் எழுதிய
ஆருடங்களும் பொய்த்தது
அசிங்கங்களால்
அலங்கரிக்கப்பட்டபடி ...
அழவும் முடியவில்லை
அக மகிழவும்
முடியவில்லை.
அகிலத்தில்
இங்கு மட்டும் தான்
ஓவியத்துக்கும்
இனத்துவேசக் கொடூரம்

**வளலாய் செல்வகுமார்**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழைஇருந்தான் கூறல் கடன்.

*திருக்குறள்*

## நமது நோக்கு

### விபத்துக்களும், மோதல்களும் தாக்கங்களும், விளைவுகளும்

நேற்றுமுன்தினம் மாம்பழம் சந்தி - அரியாலையில் இராணுவத்தினரின், பவல் கவச வாகனம் ஒன்று வீதியால் சென்றுகொண்டிருந்த ஓட்டோ வாகனம் ஒன்றுடன் மோதி, அதனை விபத்துக்குள்ளாக்கியதை அடுத்து, அங்கு ஏற்பட்ட பதற்றநிலை - மீண்டும் படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே ஒரு மோதல்நிலையை உருவாக்கி, இருதரப்பிலும் பலர் காயமடையவைத்துள்ளது.

அண்மைக் காலத்தில் படைத்தரப்பு வாகனங்கள் - பொதுமக்களின்மீதும், அவர்கள் வாகனங்களில் தமது சுயதேவைகளுக்காக, இயல்பான பயணங்களை மேற்கொள்ளும்வேளைகளிலும் - காட்டுமிராண்டித்தனமாக மோதுவதும், அதில் பொதுமக்கள் கொல்லப்படுவதும், காயப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாகி வருகின்றன.

அடுத்தடுத்து நிகழும் இந்த சம்பவங்கள் - இயல்பாகத் தவிர்க்கமுடியாத வகையில் ஏற்படும் விபத்துக்களாகக் கருதமுடியாதநிலை ஒன்றும் உருவாகியுள்ளது.

வேண்டுமென்றே இந்த விபத்துக்கள் - திட்டமிட்ட முறையில், பரவலாகப் பல்வேறு இடங்களில், இராணுவ, அரசியல் உள்நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகங்களும், பரவலாகப் பொதுமக்கள் மனதில் உறுதியாக எழத்தொடங்கியுள்ளது.

விபத்துக்கள் நிகழும் இடங்களும், நிகழும் விதங்களும், விபத்துகளைத் தொடர்ந்து உருவாகும் பதற்றமான சூழலும், படையினர் அந்தச் சூழலை உருவாக்கும் விதமும், அந்த நிலைமையைப் படைத்தரப்பு எதிர்கொள்ள முனையும் தன்மையும் - மேற்குறித்த சந்தேகங்களை உறுதிசெய்வதாகவே அமைந்துவருகின்றன.

தண்ணீரத் தாங்கியடிச் சந்தி, கச்சாய், நாவாந்துறை, நெல்லியடி ஆகிய பகுதிகளில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட விபத்துகளிலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதங்களிலும், பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்களே... அதுவும் அப்பாவி மக்களே.

பாதிப்புற்ற மக்கள் கொந்தளித்து, உணர்வெழுச்சி கொள்வது இயல்பானதே... தவிர்க்கமுடியாததே... ஆனால், அந்த மக்களை - இராணுவத்தினர் ஆயுத முனையில் அடக்க முற்படுவதுடன், தமது தரப்புத் தவறுகளை மறைக்க- தடயங்களை அகற்றமுனைவதுடன், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க நிலைகொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் பொலிஸ் தரப்பினரும் - படையினர் செய்யும் அடாவடித் தனங்களைத் தடுக்காது, அவர்களுக்குப் பாதுகாப்பளித்துக் காப்பாற்றமுயல்வதுடன், அதற்காகப் பொதுமக்கள்மீது படைத்தரப்பினர் துப்பாக்கிப்பிரயோகம், கண்ணீரப்புகைத் தாக்குதல், தடியடி நடவடிக்கை ஆகியவற்றை மேற்கொள்வதுதான் அசிங்கமானதாகும்.

இந்த நியாயமற்ற - நீதியை அவமதிக்கும் படைத்தரப்பைத் தட்டிக்கேட்க யாருமில்லாததுதான், எதிர்கால ஆபத்துக்கள் குறித்த அச்ச உணர்வை மக்களுக்கு அதிகரிக்க வைத்துள்ளது.

எல்லா வகையிலும் மக்களின் - தமிழ் மக்களின் - சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் - இந்த சமாதான சூழலிலும் அதிகரித்து வருகின்றது. இதனை அரசால் கட்டுப்படுத்த இயலாதநிலையே தொடர்கிறது.

தண்ணீரத் தாங்கியடி விபத்துச் சம்பவத்தின் பின்னர், விபத்து இடங்களிலிருந்து, விசாரணை முடியும்வரை, சடலங்களையோ, வாகனங்களையோ அகற்றக்கூடாது என நீதிவான் - படைத்தரப்பினருக்கும், இராணுவப் பொலிஸாருக்கும் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்ததாகக் கூறப்பட்டது.

ஆனால், சட்ட ஒழுங்கு விதிமுறைகளையோ, நீதிவானின் உத்தரவையோ அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதியதாகத் தெரியவில்லை.

அவர்கள் தன்னிச்சைப்படி, இராணுவத்தனமாகவே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

இதனை அவதானிக்கும்போது, அவர்களின் பின்னால் தமிழ் மக்களுக்கும், சமாதானச் சூழலுக்கும், அமைதி முயற்சிகளுக்கும் எதிரான சக்திகளின் ஆதரவுப் பின்னணி பலமாக இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது. இல்லையேல், இவ்வளவு சர்வாதிகாரமாகச் செயற்படப் பலம் இருக்காது.

இந்தச் சம்பவத்தின்போது, செய்தி சேகரிக்கச்சென்ற, பத்திரிகையாளர்கள் மீதும் படைத்தரப்பினர் - தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். செய்திகள் வெளியே தெரியவந்தால், அது தமக்குப் பிரச்சினையாக இருக்கும் எனக் கருதியதே இதற்குக் காரணமாகும்.

ஆனாலும், சம்பவங்கள் அனைத்தும் மூடிமறைக்கக் கூடிய விடயங்களல்ல. இவை மக்கள் சம்பந்தப்பட்ட, அவர்களின் சுதந்திர நடமாட்டம் சம்பந்தப்பட்ட விடயம்.

மக்கள் மீதான அச்சுறுத்தலும், அடக்குமுறைகளும் அதிகரிக்கப்பட்டால், அதன் எதிரொலிகள் மீண்டும் குடாநாட்டில் - இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்தலாம் எனப் படைத்தரப்பும், சமாதான எதிர்ப்பாளர்களும் திட்டமிடலாம்.

எதுவானாலும், இன்றையநிலையில் தமிழ் மக்கள் எதனையும் தாமே எதிர்கொண்டுநிற்கும் மனோபலத்துடன் செயற்படத் தொடங்கிவிட்டார்கள் என்பதையே கடந்த பன்னிருநாள் நிகழ்வுகள் தெட்டத்தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

# வாகன விபத்துக்கள் என்ற பெயரில் இராணுவத்தின் கொலை வெறியாட்டம்

## சர்வதேச மாணவர் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த பல ஆண்டுகாலமாக தமிழ் மக்களைத் திட்டமிட்ட வகையில், போர் என்ற பெயரில் கொலை வெறியாடிய சிங்கள இராணுவம் இன்று மலர்ந்துள்ள சமாதான சூழலில் போர் என்ற வடிவத்தினூடாக கொலைவெறியாட முடியாத ஒரு சூழ்நிலையில் தமது வக்கிரக்குணத்தை மூடிமறைக்க முடியாது, தமது வெறியாட்டத்தை வாகன விபத்து என்ற பெயரில் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் இரு இளைஞர்கள், யாழ்.பிரதான வீதியில் இராணுவ வாகனத்தால் அடித்து கொலைசெய்யப்பட்டார்கள். தொடர்ந்து நாவாந்துறை சாவகச்சேரி, கச்சாய் வீதிப் பகுதிகளிலும் கொலைசெய்யும் நோக்கத்தோடு, இராணுவ வாகனத்தால் மோதியபோதும், அந்த அப்பாவி பொதுமக்கள் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். நேற்று மாலை கூட, அதேநோக்கோடு ஒட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த எம் மக்கள் மீது, திட்டமிட்டு இராணுவ வாகனத்தால் மாம்பழம் சந்திப் பகுதியில் மோதியுள்ளனர்.

இவர்களின் இந்த காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டு, கொதிப்படைந்த எம்மக்கள் நிராயுதபாணிகளாக நின்று, தமது எதிர்ப்பை சிங்களப் படைகளுக்கு காட்டிய போதெல்லாம், அவர்கள் ஆயுதமுனையில் அடக்கிவிடவே நினைக்கிறார்கள். கடந்த காலங்களிலும் எம்மக்களை அடக்க முற்பட்டதன் விளைவாகவே, இன்று தமிழினம் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் அணிதிரண்டு, மரபுவழி இராணுவமாக மாறி - சிங்களப்படைகளுக்கு பெரும் அடிகொடுத்து, வெற்றிகளைக் குவித்து - அவ்வெற்றியின் ஊடாக இன்று ஒரு சமாதானத்தைத் தோற்றுவித்துள்ளனர்.

சமாதானம் தொடங்கி ஒரு வருடத்துக்குள்ளேயே, சிங்களப் படை தமிழ்ச்சேனையிடம் வாங்கிய அடிகளை மறந்து மீண்டும் மக்களை அடக்க நினைக்கிறார்கள். இவ்வாறு சிங்களப்படைகள் மக்களின் உணர்வுகளை மதிக்காது, மக்களை அடக்க முற்பட்டால் மீண்டும் அடக்குமுறையாளனின் கையிலுள்ள ஆயுதங்களுக்கு விளங்கக்கூடிய மொழியிலேயே, தமிழ்மக்கள் பேசவேண்டி வருவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

எனவே, சிங்களப்படைகள் கடந்தகாலங்களை மீட்டி ஒரு தடவை பார்த்துவிட்டு, உடனடியாக திட்டமிட்டவகையில் எம் மக்கள் மீது வாகன விபத்து என்ற பெயரில் மேற்கொண்டு வரும் கொலைவெறியாட்டத்தை நிறுத்தி, சமாதானத்தைத் தொடர வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இவவாறான விபத்துக்கள் தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் கூறாது மௌனிகளாக இருக்கின்ற இராணுவ அதிகாரிகளையும் வன்மையாகக் க்ண்டிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹக்கீமின் மெய்ப்பாதுகாவலரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்று திருடப்பட்டது!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் பாதுகாப்பு அதிகாரியின் பிஸ்டல் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கிண்ணியாவில், கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இது தொடர்பாக, சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டும், இதுவரை அந்தப் பிஸ்டலை திருடியவரை கண்டுபிடிக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் இருபிரிவினருக்கிடையில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக, கிண்ணியா சென்ற அமைச்சர் ஹக்கீம் - முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றி, வெளியே வரும்போது - மூவாயிரம் முஸ்லிம் மக்களால் சுற்றிவளைக்கப்பட்டார். அந்த நேரத்தில் அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியின் பிஸ்ரலும், ஒரு பிரிவினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தப் பிஸ்டல் அதிரடிப்படையூடாக வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் மா அதிபரை வீட்டுக்கு அனுப்புமாறு கொழும்பு நகரில் சுவரொட்டிகள்!

### சிஹல உறுமய ஒட்டியுள்ளது

(கொழும்பு)

போதைவஸ்து வியாபாரம் செய்யும் நபரோடு தொடர்பு வைத்திருந்தார் என்று குற்றம்சாட்டப்பட்ட பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராஜாவை - வீட்டுக்கு அனுப்பிவைக்குமாறு, சிஹல உறுமய கொழும்பு நகரில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை, பொலிஸ் குழுக்கள் நீக்கியதென்றும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு சிஹல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரைப் பதவியிலிருந்து நீக்காவிட்டால், பொலிஸ் தலைமையகத்தைச் சுற்றிவளைத்து - எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு சிஹல உறுமய நடவடிக்கை எடுத்துவருகிறது.

# அகதிகளாக வாழும் மக்களை நாம் புறந்தள்ளி விடக்கூடாது!

## சட்ட உதவி மன்றத் தலைவர் வஜிர விஜேரட்ண

இன்றைய தலைவர்கள் கூட, நாளை அகதிகளாக மாறலாம். இன்று அகதியாக உள்ள ஒருவர்கூட - நாளைய நாட்டின் தலைவராகலாம். இது உலக வழமை. எனவே, அகதிகளை நாம் புறக்கணித்து நடக்க முடியாதென தெரிவித்தார். பிரதேச சட்ட உதவி மன்றத்தலைவர் விஜேரட்ண, நேற்று யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் யாழ். மாவட்ட சட்ட உதவிகள் மன்றத்தலைவர் சாந்த அபிமன்னசிங்க தலைமையில் நடைபெற்ற - பெண்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகள் கலந்துரையாடலில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று எமது நாட்டில் அகதிகள் அதிகளவிலே உள்ளனர். இவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு அரசு தவறிவிடுகிறது. வட பகுதியில் வாழும் தமிழ்மக்கள் மட்டுமல்லாது, தென்னிலங்கையில் வாழும் சிங்களமக்களும் இன்று பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கென, பிறநாடுகளால் வழங்கப்படும் நிதியின் பெரும்பகுதி பயன்படாத நிலையில் திரும்பிவிடுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக இந்தநிலையே ஏற்பட்டுள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இதற்குரிய நடவடிக்கைகளை மக்கள்தான் எடுக்கவேண்டும்.

நான யாழ்ப்பாணத்திற்கு முன்னர் வந்திருந்தபோது, சாவகச்சேரி நகரைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். போரினால் மோசமான முறையில் பாதிப்படைந்த நகரை, தற்போது சென்று பார்த்தபோது மிகவும் மகிழவாக இருந்தது. மிகவும் வேகமான முறைகளில் மக்கள் புனர்நிர்மாணம் செய்திருக்கிறார்கள். எனவே, இத்தகைய திறன்மிக்க மக்களுக்கு, பிறரால் நிதி உதவி வழங்கப்படும்போது, மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையிலேயே - அவர்கள் தம்மை அபிவிருத்தி செய்து கொள்கிறார்கள் என்பதில் - எதுவித சந்தேகமும் இல்லை.

நாம் இன்று உயர் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு, வெளிநாடுகளில் கையேந்தி நிற்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும். யாழ்ப்பாண மக்களால் நிச்சயமாக இந்த நிலையை மாற்றமுடியும். அவர்களிடம் உள்ள மூளைவளத்தைப் பயன்படுத்தி, நவீன தொழிநுட்ப அறிவுகளை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இதற்கு இந்தியாவை உதாரணமாக கூறமுடியும். இங்குள்ள இளைஞர்கள் வெளிநாடு சென்று, புதிய தொழிநுட்ப அறிவுகளை பெற்று வந்து, அதனை தமது நாட்டிலே பயன்படுத்தி, மிகவும் முன்னேற்றகரமான நிலையை உருவாக்கியுள்ளார்கள்.

எமது நாட்டில் நடைபெற்ற 17 வருட யுத்தம், எம்மை வெகுவாகப் பின்தள்ளிவிட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை இழந்துள்ளார்கள். தமது உரிமைகளை இழந்துள்ளார்கள்.

இன்று தமிழ் மொழி, அரச சட்ட ரீதியாக மொழியாகவிருந்தாலும், பொலிஸ் நிலையங்களில் தமிழ்மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் சிங்கள மொழியிலேயே வாக்குமூலங்கள் பெறப்படுகின்றன. அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இது சட்ட ரீதியான குற்றமாகும்.

இன்று இலங்கையில் ஆண்களை விட, பெண்களே அதிக சதவீதத்தில் உள்ளார்கள். ஆனாலும், நாடாளுமன்ற பிரதிநிதிகள் பற்றி கருதும்போது, பெண்களின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த நிலை எதிர்காலத்திலேயே மாறவேண்டும்.

எமது நாட்டில், இன்று மனித உரிமைகள் என்ற விடயம் கேலிக்குரியதாகவும், கேள்விக்குரியதாகவும் ஆகிவிட்டது. இந்த நாடு, தற்போது மிகவும் கீழ்த்தரமான நிலையிலே உள்ளது. எமது மக்களுக்கு இன்று தேவைப்படுவது - மகிழ்வான வாழக்கையல்ல, பாதுகாப்பான வாழ்வே ஆகும்.

மனித பாதுகாப்பு பற்றிய அறிவை, எல்லோரும் பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு பொருளாதார, நிதி ஏனைய தொழிநுட்ப உதவிகளை வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

வயது முதிர்ந்தவர்களை இன்று நாம் மதிப்பும், மரியாதையும் கொடுத்து பேணுவது கிடையாது. இந்த நிலை கவலை தரும் விடயமாகும். சிலர், ஓய்வூதியம் பெறுவதற்காகவே- வயோதிபர்களை பராமரிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

வயோதிபர்களை பராமரிப்பதிலேயே பெண்கள் முக்கிய இடம்வகிக்கிறார்கள். அவர்கள், அதில் மட்டுமல்ல - எமது நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திலும், அதிக பங்கை அளிக்கிறார்கள். இன்று எமது நாடு, மத்திய கிழக்கிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு வருமதி மூலமாகவும், ஆடை, தேயிலை தொழிற்சாலைகளின் மூலமாகவே அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்கிறது. இந்த துறைகளிலே பணியாற்றுபவர்களில் அநேகமானவர்கள் பெண்கள்தான். ஆனால், பெண்கள உரிய முறையிலே கௌரவப்படுத்தப்படவில்லை எனவும் விஜேரட்ண மேலும் தெரிவித்தார்.

## வரவு-செலவுத்திட்டத்தை தோற்கடிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டம்!

(கொழும்பு)

நவம்பர் மாதம் [illegible]சாங்கம் சமர்ப்பிக்கவிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டம்தீட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக - நாடாளுமன்ற உறுப்பினர்களோடும், கட்சிகளோடும் பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

எதிர்க்கட்சியால் வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடிக்க முடியாதுபோனால் - நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியேயும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு, எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றன.

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நேரத்தில், நாடு பூராவும் பிரசாரங்கள் மேற்கொள்வதற்கு - இப்பொழுது சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதாகவும், எதிர்க்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

# பொதுமக்களை சிரமப்படுத்தும் சட்டவிரோத மின்பாவனை



இன்றைய நவீன இலத்திரனியல் - உலகில் நாளுக்குநாள், பல புதிய வகையான மின் பாவனைப் பொருட்கள் வந்துகொண்டேயுள்ளது. இருந்தும் அண்மைக் காலங்களின் நவீன, சாதனங்களின் வருகையும், பாவனையும் அதிகரித்துள்ளன.


இதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் எல்லோரும் உள்ளனரா என்றால், இங்கேதான் ஓர் மௌனம் தெரிகிறது. மின்சாரத்தைப் பாவிப்பது அவரவர் விருப்பம், சுதந்திரம். ஆனால், இதனைச் சட்டவிரோதமாகப் பாவிப்பதே, இன்று பலருக்கும் தலையிடி கொடுக்கும் செயலாகவுள்ளது. சிலர், சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவதால் - மின்சாரசபைக்கும், சட்டரீதியாக மின் இணைப்பைப் பெற்றவர்களுக்கும் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

இதற்கு ஒருபடி மேலேசென்று பார்ப்போமானால், சட்டவிரோத மின்பாவனையால், அநியாயமான உயிரிழப்புக்கள் ஏற்படுகிறன. இவற்றைத் தெரிந்தும், சிலர் தொடர்ச்சியாகச் சட்டவிரோத மின்சாரத்தைப் பெறுவது கவலை தரும் விடயம். சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களில் சிலர்- தமது பக்கம் சில சாதகமான காரணங்களையும் வைத்திருக்கிறார்கள்.

சட்டவிரோத மின்பாவனை இடம் பெறும் முக்கிய இடங்களாக - கொழும்புத்துறை, கோப்பாய், ஆனைக்கோட்டை, சவற்காடு, காக்கைதீவு, சுதுமலை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் எனப் பல இடங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான இடங்களில், குறிப்பிடும் படியாக உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும், மிக அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில், இரவு முழுவதும் தொலைக்காட்சி பார்த்து விட்டு, அதிகாலையில் கொழுவிய மின் இணைப்பை அகற்றும்போது, பரிதாபமான முறையில் - 19 வயது இளைஞர் ஒருவர் பலியான சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பெறும் பெரும்பாலானவர்கள் - பூரணமாகத் தமது வீட்டிற்கான மின் இணைப்புக்களை மேற்கொண்டவர்களாகவே உள்ளனர். இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்றால், அதற்குப் பல காரணங்களை முன் வைக்கின்றார்கள். இதில், மின்சாரத்தூண்கள் பெரும் பங்கு வகிக்கிறது. சிறு ஒழுங்கையுடன் முடியும் வீட்டிற்கு, நேரடியான மின் இணைப்பை வழங்கவேண்டும் என்றால், ஒன்றுக்கு மேற்பட்ட தூண்கள் தேவைப்படுகின்றன. மின்சார சபை



யிடம் ஊழியவளம் மற்றும் ஏனைய வளங்கள் இருந்தாலும், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவ்வாறான தேவைகளை உடன் நிறைவேற்ற முடியாதுள்ளது.

இவற்றிற்கு மேலாக, மக்களுக்குப் புதிய இணைப்பைப் பெறுவதற்கு - மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள், அதற்கு எவ்வாறான முறையில், எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்ற பூரண அறிவின்மை. இவற்றுடன் - ஒரு வீட்டிற்கான மின் இணைப்பை பெறுவதற்குப் பல தடவைகள் தேவையற்ற விதத்தில் அலைந்து, திரிந்து - தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட சலிப்பு, உரிய அமைப்புக்களின் கடும்போக்கான தன்மை என்பனவைகூட, சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்புக்குக் காரணமாகியுள்ளன.

கொழும்புத்துறை பகுதியில், நீண்ட தூரத்திற்கு ஒரு வயர்மூலம், சட்டவிரோதமாக மின் இணைப்பை பெறுகிறார்கள். இது ஆபத்தான விடயமும்கூட. இந்தப் பகுதிக்குக் கடந்த ஒரு வருட காலமாக, மின்சாரத் தூண் நாட்டப்பட்டிருந்தும், இதற்குரிய மேலதிக இணைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்குரிய காரணம் எதுவெனத் தெரியவில்லை. இவ்வாறான மின்சாரசபையின் அறுமந்த போக்கு - மக்களை விசனமடையச் செய்கிறது. இதனாலேயே, இந்தப் பகுதி கிராம மக்கள் ஒன்று சேர்ந்து, குழுவாக - சடடவிரோதமாக மின்பாவனையை இப்பொழுதும் பெற்று வருகின்றார்கள்.

புதிய மின் இணைப்பை பெறுவதென்றால், பொருத்துதல் செலவு 2400 ரூபா. வைப்புத் தொகை 650 ரூபா. இணைப்புவயர் ஒரு மீற்றரிற்கு 102 ரூபா. இவற்றுடன், நிலுவைப் பணம் என்பன அறவிடப்படுகின்றது. இவற்றைப் பூரணமாக விளங்கிக்கொண்டு, சட்டவிரோத மின்பாவனையை நிறுத்தி, உரிய அமைப்புக்களுக்கும், தங்களுக்கும் பயனுள்ள வழிகளில், மக்கள் ஒவ்வொருவரும் செயற்பட முன்வர வேண்டும். தற்போது மின்சாரசபையின் சுன்னாகக் கிளையினர் கடன் அடிப்படையில் மின்குமிழ்களை வழங்குகின்றனர் இது வரவேற்கத்தக்க செயல்.



மின்சாரசபையால் வழங்கப்படும் மின்சாரத்தில் - 10 வீதத்திற்குமேல் சட்டவிரோதமாகப் பாவிக்கப்படுகிறது. இதனால், திட்டமிடல், உற்பத்திவலு மின்மாற்றிகள் போன்றவற்றின் இழப்புக்கள் அதிகரிக்கும். சட்டவிரோத மின் பாவனையைத் தடுப்பதற்கு - சமூக விழிப்புணர்வு, புரிந்துணர்வு மக்களிடையே ஏற்படவேண்டும். இவ்வாறு மக்கள் ஒன்று திரள்வார்களாயின் - தேவையற்ற உயிரிழப்புக்களை தடுப்பதுடன் வீண் அசம்பாவிதங்களையும் குறைத்துக்கொள்ளலாம். ❋

**விஜேந்திரன்**

# உதய சூரியன் கிராம மக்களின் அவல வாழ்க்கை எப்போது தீரும்



சாவகச்சேரி நகரின் மத்தியின் கிழக்குப் புறமாக அமைந்த ஓர் ஏழை மக்களின் கிராமமே உதயசூரியன் கிராமம் ஆகும். இங்கு இரத்தத்தினையே வியர்வையாகச் சிந்தி உழைக்கின்ற தொழிலாளர் வர்க்கமே அதிகளவில் குடியிருக்கின்றனர். இந்த வகையில் ஜே/301 கிராம சேவகர் பிரிவினுள் உள்ளடங்கும் இந்தக் கிராமத்தில், 40 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கை காரணமாக, மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்றனர்.



செய்திக் கட்டுரை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின், மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். அந்தவகையில், உதய சூரியன் கிராம மக்களும் ஏனைய மக்களைப் போன்று, தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக, உதயசூரியன் கிராம மக்களின் வாழ்விடங்கள் [illegible]னைத்தும், படையினரின் பாரிய இராணுவ முகாம்களாகவும், உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் காணப்பட்டதோடு - முட்கம்பிகள், இராணுவ வேலிகள், இராணுவ காவலரண்கள் என வரிசைப்படுத்தப்பட்டு, மக்கள் எவரும் தமது சொந்த வீடுகளுக்குச் செல்லமுடியாத அளவில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த ஏழை மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது, எத்தகைய உடமைகளையும் எடுத்துச்செல்ல முடியாதென, இராணுவத்தினர் 2000 ஆம் ஆண்டு தடைவிதித்திருந்தனர். இடம் பெயர்ந்து செல்ல முற்பட்ட மக்கள் உடமைகளை, எடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை. தாங்கள் இருப்பதாகவும், தாங்கள் இருக்கும் வரை எந்த மக்களும் இடம்பெயர்ந்து செல்ல முடியாத அளவுக்கு இராணுவத்தினர் தடைவிதித்தனர்.

ஓரிரு வாரங்கள் கழிய, எறிகணை வீச்சும், யுத்த மேகங்களும் சூழ்ந்து கொண்டவேளை,



இத்தகைய தடைகளை விதித்த இராணுவத்தினர் - தமது ஆயுதங்கள், தமது சக படைவீரர்கள் காயமுற்று இருந்த வேளையிலும், அவர்களையும் விட்டு, கொடிகாமம் வரைக்கும் கால்நடையாக தலைதெறிக்க ஓடினார்கள். அத்தகைய காலப்பகுதியில், சாவகச்சேரி நகர் - விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டது. மீண்டும் இராணுவத்தினர் இந்தப் பகுதிகளை மீளக்கைப்பற்றியபோது, மீண்டும் தமக்கு அச்சுறுத்தலாக இருக்கும்; தாம் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் எனக்கருதி, இத்தகைய பிரதேசங்களை மக்கள் செல்ல விடாதபடி - முகாம் அமைத்து இருக்கின்றனர். உதயசூரியன் கிராமத்திற்குக் கிழக்குப் புறமாக கச்சாய் கடல் நீரேரியும், தெற்கு, கிழக்குப் புறங்களில் சங்குப்பிட்டி, கேரதீவு பகுதிகளும் காணப்படுகின்றன.

இந்தக் கிராமத்து மக்கள் மீளக்குடியமர முடியாது தவித்து நின்றபோது, தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான தையல் பயிற்சி நிலையம் இயங்கிய இடத்திலே, 40 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்கள் குடிசைகள் அமைப்பதற்கான வசதிகளைச் சாவகச்சேரி நகரசபை ஏற்படுத்திக் கொடுத்தது. அதாவது, சாவகச்சேரி நகர்ப்பகுதிகளில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது, இங்கு கழற்றப்படும் பழைய மரங்கள், கூரைத்தகடுகள் என்பவற்றை வழங்கி, அவர்கள் குடியமர்வதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தனர். இத்தகைய மக்கள் குடியிருக்கின்ற ஓர் இடமானது, இனிவரும் காலங்கள் மழைகாலம் ஆகையால், இவர்களின் குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

இவர்களது சொந்த வீடுகளில் குடியிருப்பதற்கு அனுமதியினை பெற்றுக்கொடுப்பதற்கு, எவரும் முன்வருவதாக இல்லை. அரசியல்வாதிகள்கூட இதில் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் கும்பிடு போட்டுக்கொண்டு, மூலைமுடுக்கெல்லாம் சென்று வாக்குக் கேட்பார்கள். தேர்தலில் வெற்றிபெற்றதும், தம்மை நாடாளுமன்றம் அனுப்பிய மக்களை மறந்து விடுகின்றனர். இனிவரும் காலங்களில் இத்தகைய அரசியல்வாதிகள் வாக்குக்கேட்டு மக்களை நோக்கி வருகின்றபோதுதான், அவர்களுக்கு இனி மக்கள் வழங்கும் மரியாதைகள் தெரியப்போகின்றது. இப்பகுதியில் 40 குடிசைகள் வரையில் அமைக்கப்பட்டு இருக்கின்றது. இக்குடிசைகள் ஒவ்வொன்றுக்கும் இடையிலான இடைவெளிகள் 10 மீற்றர் தூரம்கூட கிடையாது. அவ்வாறு நெருக்கமாக இக்குடிசைகள் அமைக்கப்பட்டு, மக்கள் எதுவித வசதிகளும் இன்றித் தவிக்கின்றனர். ஆனால், இவர்களுடைய வீடுகளில் இராணுவத்தினரோ உல்லாசமாக மழை, வெயில் இன்றி சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். இது எந்தவகையில் நியாயமாகும்.

இந்தப் பகுதியில் மக்கள் குடியிருக்கின்ற இடத்திற்கும், இவர்களது குடியிருப்புக்களை ஆக்கிரமித்து இருக்கின்ற இராணுவம் இருக்கின்ற இடத்திற்கும் 50 மீற்றர் தூரம்தான் காணப்படுகின்றது. இவர்கள் தற்போது குடியிருக்கின்ற இடத்தில் நின்று பார்க்கும்போது, அவர்களது சொந்த வீடுகளில் படையினரின் செயற்பாடுகளை நேரடியாகக் காணக்கூடியதாக இருக்கும.

இத்தகைய குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு எதுவித வசதிகளும் காணப்படவில்லை. அவர்கள் இரவில் கல்வி கற்பதும் அபாயமானது. இவர்கள் குப்பி விளக்கிலேயே கல்வி கற்கவேண்டும். குப்பி விளக்கு ஒன்று தவறுதலாக வீழ்ந்து தீப்பற்றுமாயின், இந்த மக்களின் 40 வீடுகளும் தீப்பற்றிவிடும். இந்தநிலையில்தான் இவர்கள் தமது வீடுகளை அமைத்துக் குடியிருக்கிறார்கள்.

இந்த இடங்களை அண்டிய பகுதியில் பெண்களின் சுயவேலை முயற்சிக்காக தும்புத் தொழிற்சாலையொன்று இயங்கிவந்தது. இந்தத் தும்புத் தொழிற்சாலையும் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகின்றது. அத்தோடு, இந்தப் இடங்களை அண்டிய பகுதிகளில் மீன்பிடிப்பதற்குக்கூட அனுமதியில்லை. இவ்வாறு, இந்த மக்களின் அவலங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இந்தக் கிராம மக்கள் தமது குடியிருப்புக்களில் குடியிருக்க யாராவது அனுமதி பெற்றுத்தருவார்களா என, ஏங்கித் தவிக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் வாழும் சிறார்களின் எதிர்காலம் மழுங்கடிக்கப்பட்டுக்கொண்டே போகிறது. இதனை இக்கிராம மக்கள் - அரசியல்வாதிகளையே கடுமையாகச் சாடுகிறார்கள். அரசியல்வாதிகளினால் ஏழை மக்களை இலகுவில் ஏமாற்றிவிடமுடியுமென்று நப்பாசை கொண்டு, தேர்தல் காலங்களில் தம்மிடம் வாக்குக்கேட்டு வருவார்கள். இனிவரும் காலங்களில் மீண்டும் ஓர் தேர்தலின்போது தமது குடியிருப்புக்களை நோக்கி அரசியல் வாதிகள் வருவரர்கள் எனச் சாடுகிறார்கள்.

இத்தகைய மக்களின் அவலவாழ்க்கை என்றுதான் நீங்குமோ?

**க.கஜீதரன்**

# நேபாளத்தில் கடும் சண்டை; 38 பேர் கொல்லப்பட்டனர்!

## தற்காலிக போர்நிறுத்தம் முறிந்தது

நேபாளத்தில் டாங் என்ற இடத்தில் பொலிஸாருக்கும், மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் - 35 மாவோ தீவிரவாதிகளும், 3 பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்தச் சண்டை நேற்றுவரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்துக்களின் விழா ஒன்றை முன்னிட்டு கடந்த 9 நாட்களாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த தற்காலிக போர்நிறுத்தம் மேற்படி மோதல்களை அடுத்து முறிவடைந்துள்ளது. இந்தத் தற்காலிக போர்நிறுத்த காலத்திலும் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த புதன்கிழமையும் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 8 பேர்வரை கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் மன்னர் ஆட்சியினை அகற்றுவதற்காகவே மாவோ தீவிரவாதிகள் போராடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தலை ஒட்டிப்பிறந்த சிறுவர்களைப் பிரிக்கும் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக ஆரம்பம்!


## வைத்தியர்கள் தெரிவிப்பு



எகிப்தைச் சேர்ந்த தலை ஒட்டிப் பிறந்த 2 வயது நிரம்பிய அமகட், மொகமட் ப்ரகிம் எனும் சிறுவர்களின் தலைப்பகுதியை பிரித்தெடுக்கும் சத்திரசிகிச்சை சனிக்கிழமை முதல் அமெரிக்காவில் டல்லாசில் அமைந்துள்ள குழந்தைகளுக்கான மருத்துவமனையில் நடைபெறுகின்றது.

இவர்களது சத்திரசிகிச்சையின் ஆரம்பக்கட்டம் வெற்றிகரமாக அமைந்துள்ளதாக - சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட படுக்கையொன்றில் இவர்களது சத்திரசிகிச்சை நடைபெற்றுவருவதாகவும், சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு- தொடைப்பகுதியிலிருந்து தசை எடுக்கப்பட்டு நிரப்பப்படவுள்ளதாகவும் இச் சத்திர சிகிச்சை மேற்கொண்டு வரும் வைத்தியஅதிகாரி 'ஜிம் தோமஸ்' தெரிவித்தார்.




தற்போது இரு மூளைப்பகுதிகளுக்கும் இரத்தம் வழங்கும் பொதுக் குழாய்களை பிரித்தெடுத்து, அவை தனித்தனியே ஒவ்வொரு மூளைக்கும் இரத்தச் சுற்றோட்டத்தை விநியோகிக்கும் வகையில் மாற்றும் பணியில் வைத்தியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவை வலைப்பின்னல் போல் அமைந்துள்ளதால் மிகவும் கவனமாக சிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதாகவும் இவற்றில் ஏற்படும் சிறு தவறுகூட, ஒருவரினது அல்லது இருவரினதும் மரணத்திற்கு வழிவகுக்கும் சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவர்களது வயதையுடைய கௌத்தமாலாவைச் சேர்ந்த இரு சிறுமிகளுக்கு - லொஸ்ஏஞ்சலில் நடைபெற்ற இதுபோன்றதொரு சத்திரசிகிச்சையின் ஆரம்பத்தில் சில சிக்கல்களை எதிர்நோக்கியபோதும், இறுதியில் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2.5 மில்லியன் குழந்தைகள் பிறக்கும் போது ஒருவர் இவ்வாறு ஒட்டிப்பிறக்கும் நிலை காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## செப் 11 தாக்குதலுக்கு பழிவாங்கும்நோக்கில்

# இந்திய சீக்கியரை கொன்ற நபருக்கு நீதிமன்று மரணதண்டனை விதிப்பு!



அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 இல் நடைபெற்ற வான்தாக்குதலுக்கு பழிவாங்கும்முகமாக அராபியர் என தவறுதலாக நினைத்து இந்தியாவைச் சேர்ந்த சீக்கியரான பால்பிர் சிங் சோடி என்பவரைச் சுட்டுக் கொன்ற அமெரிக்கரான பிராங் சில்வா ரோகு(வயது 44) என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய சீக்கியரான சோடி - அவருக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வைத்து, செப்ரெம்பர் தாக்குதலை அடுத்து ரோகுவால் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

கொலையாளி - இன்னொரு எரிபொருள் நிலையத்தில் கடமையாற்றிய லெபனானைச் சேர்ந்த ஒருவரையும், ஆப்கானைச் சேர்ந்த குடும்ப அங்கத்தவர்களையும் கொலை செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்டு, இதுவரை வழக்கு நடைபெற்று வந்தது.

இவர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் - கொலையாளி ஒரு மனநோயாளி என நீதிமன்றில் தெரிவித்தார். எனினும், அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறையில் 2000 ஆம் ஆண்டு 28 பேரும், 2001 ஆம் ஆண்டு 481 பேரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் 19 வயதுடைய பலஸ்தீனச் சிறுவன் பலி!




இரண்டு நாட்களாக இஸ்ரேல் படையினரால் பலஸ்தீனத்தின் ராபா பிரதேசத்திலுள்ள அகதி முகாமைச் சுற்றி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது- 19 வயதுடைய பலஸ்தீன சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான். பலர் காயமடைந்தனர். இந்த முற்றுகைத் தாக்குதலின்போது - இதுவரை 3 வயதுக் குழந்தை, இரு சிறுவர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

எகிப்திலிருந்து ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்காகவே தாம் இம்முற்றுகையை மேற்கொண்டுள்ளதாக, இஸ்ரேல் அறிவித்துவருகிறது.

இதேவேளை, இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா செயலர் கோபி அனான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போது 40 இற்கு மேற்பட்ட டாங்கிகளுடன் இஸ்ரேலிய இராணுவத்தினர் காஸா பிரதேசத்திலிருந்து வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருளின்றி பயணிக்கக்கூடிய நவீனரக விமானம் வடிவமைப்பு!



எரிபொருள் இன்றி பயணம் செய்யக்கூடிய நவீனரக விமானமொன்றை நாஸா ஆராய்ச்சி நிலையம் உருவாக்கியுள்ளது.

ஆகாய விமானங்கள் வானில் பறப்பதற்கு தேவையான எரிபொருளை தம்முடன் எடுத்துச் செல்வதே இதுவரை காலமும் வழமையாக இருந்தது.

இந்த புதியரக விமானக் கண்டுபிடிப்பானது விமானப் பயணத்துறையில் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவருமென அதன் வடிவமைப்பில் ஈடுபட்டுள்ள 'ரோபோட் பேர்டினி' தெரிவித்தார்.

11 அவுன்ஸ் நிறையும், 5 அடி நீளமான இறைக்கைகளின் இடைத்தூரத்தையும் கொண்டுள்ள இந்த விமானம் தரையில் இருந்து 'லேசர்' எனப்படும் கண்ணுக்குப் புலப்படாத கதிர்கள் மூலம் இயங்கச்செய்யப்படுகிறது. இந்த விமானத்தில் பிரயாணத்திற்குத் தேவையான எரிபொருளை எடுத்துச்செல்லவேண்டிய தேவைகள் இல்லாததால் உட்பக்கத்தில் வேறு தேவைகளுக்கான விஞ்ஞான, தொடர்பு சாதனக் கருவிகளை ஆய்வுகளுக்காக எடுத்துச்செல்ல முடியும் என, இந்தத் திட்டத்திற்கான தலைவர் 'டேவிட் புஸ்மன்' தெரிவித்தார். செல்போன், தொலைக்காட்சி, கணனிவலை போன்றவற்றின் தகவல் பரிமாற்றத்திற்கு இந்த விமானத்தை செயற்கைகோள் போன்று பயன்படுத்தமுடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.




காலங்கடந்த பின்தான் பலருக்கும் ஞானம் பிறக்குமென்பார்கள். காலம் கடந்து ஞானம் பிறப்பது மட்டுமல்லாது சிலர் காலம் கடந்த பின்தான் வாயைத் திறந்து சில உண்மைகளையும் சொல்ல முற்படுகிறார்கள்.

இலங்கையின் பிரதம மந்திரிப் பதவியை வகித்த பண்டாரநாயக்க தம்பதியின் மூத்த புத்திரியும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் அக்காளுமான சுனேத்திரா சில தினங்களுக்கு முன் 'ராவய' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டி வெளிவந்திருந்தது.

இதில், சுனேத்திரா பண்டாரநாயக்க தெரிவித்த சில கருத்துக்கள் - இலங்கை வானொலிச் செய்தியிலும் எடுத்துச் சொல்லப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண முடியுமென்று தங்கை சந்திரிகா நம்புகிறார். இந்த அதிகாரப் பரவலாக்கலை மக்கள் முன்னணி என்ற ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. எனவே, ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், எந்தவிதமான கூட்டும் ஏற்பட முடியாது என்று சுனேத்திரா தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஜே.வி.பியுடன் இணைந்து அரசியல் நடத்தி- ரணில் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் அல்லது ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ரணில் ஆட்சியை வீழ்த்தப் போராட்டம் நடத்த வேண்டும் அல்லது ஜே.வி.பியுடன் தேர்தல் கூட்டுவைத்து ரணில் ஆட்சியை வீழ்த்தி, தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்பதால், சுனேத்திரா - சந்திரிகா என்ற இரண்டு அக்கைமாரின் அருமைத்தம்பி அநுரா பண்டாரநாயக்க குறியாக நிற்கிறார்.

சந்திரிகா அம்மையாரின் ஜனாதிபதிப் பதவிக் காலம் இன்னும் இரண்டு வருடங்களில் முடிவடைந்துவிடும். இதன்பின், தானே ஜனாதிபதி என்றும் சில மாதங்களுக்கு முன் அநுராவே வெளிப்படையாகச் சொல்லியும் பார்த்தார்.

போகிற போக்கில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி மட்டுல்ல, அதிகாரமில்லாத ஜனாதிபதி பதவிகூடக் கிடைக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் ஆட்சிக்கு வரமுடியுமா என்ற ஐயமும், அச்சமும் அநுராவைப் பிடித்துக்கொண்டது. இதனால்தான் ஆட்சியில் ஒரு அமைச்சராக வருவதானால் கூட அக்காவின் முந்தானையைப் பிடித்தால் மட்டும் போதாது ஜே.வி.பியையும் கட்டிப் பிடித்துக் கொள்ள நினைத்துப் படாதபாடு படுகிறார்.

துரதிர்ஷ்டம் பிடித்த அநுரா எங்கே போனாலும், அங்கே ஆட்சி கவிழ்ந்து விடுகிறதென்பது சுனேத்திராவுக்கும் தெரியும் சந்திரிகாவுக்கும் தெரியும்.

அநுராவுக்கும் சுனேத்திராவுக்கும் எப்போதுமே ஒத்துவந்ததாகத் தெரியவில்லை. 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தைத் திறந்து வைப்பதற்கு பிரதமர் திருமதி சிறிமா வந்திருந்தார். அவருடன் மக்களும் வந்திருந்தனர். சுனேத்திரா தமது கணவருடன் வந்திருந்தார். அழைப்பாளர்கள், பார்வையாளர்களாக இருந்த இடத்தில் சுனேத்திரா தம்பதியிருந்த இடத்திலிருந்து மறு மூலையில் அநுரா இருந்தார். இரு தரப்பினரும் சந்தித்த சந்தர்ப்பங்களில்கூட மரியாதைக்குக் கூடச் சிரிக்கவும் இல்லை. இதே உறவுதான் இன்றும் நீடிப்பதாகக் கேள்வி.

அம்மா சிறிமாவின் மரணத்தின் பின்தான் சந்திரிகாவுடன் அநுராவுக்கு உறவு நெருக்கமானது. ஜே.வி.பியுடன் கூட்டுவைத்து அநுரா அரசியலில் வெற்றிபெற முடியாது என்று அக்காமாருக்குத் தெரியும். இருந்தாலும், சந்திரிகா பதவிக்காக அநுராவின் வழியில் ஜே.வி.பியுடன் கூட்டு வைத்து விடக்கூடாது என்பதற்காக சுனேத்திரா தமது கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறாரோ என்கிறார் நண்பர்.

ஒருவேளை, சுனேத்திராவுக்கும் இப்பொழுது அரசியலில் ஆசை வந்துவிட்டதோ என்று கேட்டார் எதிர் வீட்டுக்காரர்.

அப்படி ஆசை இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நேரத்திலாவது பண்டா-செல்வா ஒப்பந்தம் பற்றிச் சொல்லி நாட்டைக் குட்டிச் சுவராக்கியது யார் என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சுனேத்திரா நினைக்கிறாரோ என்றார் நண்பர்.

தங்கையையும், தம்பியையும் மீறி சுனேத்திரா அரசியலில் ஈடுபட்டு, பண்டாரநாயக்கவின் கொள்கை- சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் என்று சுனேத்திரா பிரசாரம் செய்ய முன்வருவாரா? அப்படி வந்தாலும், அவரை விட்டு வைப்பார்களா? ஜே.வி.பி. சும்மா இருக்குமா? என்று எதிர்வீட்டுக்காரர் கேட்டார். இதற்கு என்ன பதில்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

மினிபஸ் பயணிகளின் பயண அவலம் குறித்து பலரும் பலவிதங்களில் எழுதி அலுத்தே விட்டது.

எவரும் அது குறித்து அக்கறையுடனும் பொறுப்புடனும் சிந்திப்பதாக இல்லை.

பயணிகளின் அவலங்கள் தொடர்கதையாக நீண்டுகொண்டே போகின்றது.

மனித உயிர்களின் துன்பம் குறித்து எவருக்கு என் அக்கறை? எல்லோருக்கும் பணமே குறி.

அது முகமாலையிலிருந்து யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகளை கிழங்குகளாக அடுக்கிய மினிபஸ்.

முச்சுதிணற நிற்கவோ, அரக்கவோ முடியாத நிலையில் பயணிகள்.

இந்த இலட்சணத்தில் பயணிகள் இரசனைக்காக பாட்டு வேறு போடுகிறார்கள். நின்ற நிலையில் சிரமப்படும் பயணிகளின் காதைத் துளைத்து தலைவலியை ஏற்படுத்தும் அலறும் தொனியில் பாட்டு இசைக்கப்படுகிறது.

பாட்டா இது...

ஆபாச இரட்டைக் கருத்துக்களுடன் கூடிய அந்த முக்கல்முனகல் பாடலால் அதற்குள் நின்றிருந்த பெண்கள் தாய்மார் ... அவமானத்தால் நெளிகின்றனர்.

சில இளவட்டங்களின் மட்டமான இரசனையுடன் விமர்சனச் சிரிப்புக்கள் மனிதத்தை கொச்சைப்படுத்த...

'கலாசாரத்தை பேணும் குழுவினர் இந்த அசிங்கத்தை அவதானிக்கலாம் அல்லவா' - என்றார் ஒரு சிறுமை கண்டு பொங்கிய பெரியவர்...



-தெருவாசி

# இராணுவ வாகன விபத்துக்களைத் தவிர்க்க கண்காணிப்புக்குழு உறுதிசெய்ய வேண்டும்!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இராணுவ வாகன விபத்துக்கள் போன்று இனிமேலும் நடைபெறாதிருப்பதை கண்காணிப்புக்குழு உறுதிசெய்ய வேண்டுமென, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் அரியாலை - மாம்பழம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ வாகனம் - ஓட்டோ விபத்தையடுத்து அப்பகுதியில் பொதுமக்களும், பத்திரிகையாளர்களும், மாணவர்களும் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் அரியாலைப் பகுதியில், பொதுமக்கள் மீதும், பத்திரிகையாளர்கள் மீதும் இராணுவம் மற்றும் பொலிஸாரால் வேண்டுமென்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதும், ஓர் காட்டுமிராண்டித்தனமான செயலுமாகும்.

அண்மைக்காலமாக குடாநாட்டுப் பிரதேசமெங்கும் அதிகரித்து வரும் இவ்வாறான சம்பவங்கள் சமாதானத்தைக் குழப்ப இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கை போன்றுள்ளது. இது சமாதான விரும்பிகளின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுமுள்ளது.

வேண்டுமென்றே இந்த வாகன விபத்துக்களை ஏற்படுத்துவது போன்றும் உள்ளது. இந்த விபத்துக்களின் பின் மிகத் திட்டமிட்ட முறையில் இராணுவத்தைக் குவித்து, மக்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சும், தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கை கடந்த காலத்தில் இராணுவம் மக்களை அடக்கியாண்டதை மீண்டும் தொடர விரும்புகின்றது. இது மக்கள் சுதந்திரத்தைப் பறிக்கும் ஓர் நடவடிக்கை. இதில் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் கடுமையான கண்டனத்திற்குரியது. புகைப்படக் கருவியைப் பறித்து, பத்திரிகையாளரைத் தாக்கியது - செய்தியை இருட்டடிப்புச் செய்யவே, மேலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வாகனம் மீதான இராணுவத்தின் தாக்குதல் இராணுவம் போர்நிறுத்தத்தை எவ்வளவு தூரம் மதிக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

இனிமேலும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுதி செய்ய வேண்டும். தவறின் மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது கொண்ட நம்பிக்கை கேள்விக்குரியதாகும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவில்லை பதவியிலிருந்து சந்திரிகா விலகவேண்டும்!

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

தேர்தலில் முக்கிய நிபந்தனையாக முன்வைக்கப்பட்டு, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக ஆட்சிப்பீட மேறிய பொ.ஐ.மு. கட்சியின் தலைவி சந்திரிகா, தற்போது இரண்டாவது ஆட்சிக்காலத்தை நிறைவு செய்யும் நிலையில், பதவி விலகி, கட்சிக்குப் புதிய தலைமையை அறிவிக்க வேண்டுமென்று, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் - சந்திரிகாவின் சகோதரருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாக, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாகக் கூறினாலும், தனது முதல் ஆட்சிக்காலத்தையும், இரண்டாவது ஆட்சிக்காலத்தையும் சகல வல்லமையுள்ள ஜனாதிபதியாகவே செலவழித்துள்ள சந்திரிகா, 2005 ஆம் ஆண்டில் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அப்பதவிக்குப் போட்டியிட முடியாது. அதனால், அப்போது ஜனாதிபதியாக பொ.ஐ.மு. கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள அடுத்த பிரதிநிதி யார் என்பதை சந்திரிகா இப்போதே அறிவிக்க வேண்டுமென்று, அநுரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும், உடனடியாக ஜனாதிபதி முறையை ரத்து செய்து, இந்நாட்டின் பிரதம மந்திரியாக அவரே செயற்படுவார் என்று கருத்துக் கூறியுள்ளார். ஜனாதிபதி ஆட்சி முறையை, சந்திரிகா வெற்றி பெற்ற பின்னர், உடனடியாக ரத்து செய்ய பொ.ஐ.மு. முடிவு செய்துள்ளதால், புதிய போட்டியாளரை முன்மொழியும் அவசியம் தற்போது இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# குரங்குபாஞ்சானுக்கு செல்வதை சிஹல உறுமய கைவிடவேண்டும்!

## கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் கோரிக்கை

திருகோணமலை - குரங்குபாஞ்சான் முகாம் அமைக்கப்பட்ட பகுதிக்கு விஜயம் செய்வதற்கு, சிஹல உறுமய எடுத்துள்ள தீர்மானத்தை கைவிடவேண்டும் என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

அந்தப் பகுதிக்கு சிஹல உறுமய விஜயம் செய்வதாக இருந்தால், நிலைமை மேலும் மோசமடையும் என்று, கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

சிஹல உறுமயக் கட்சி, இந்தப் பகுதிக்கு செல்வதைத் தடுப்பதற்கு கண்காணிப்புக்குழுவுக்கு அதிகாரமில்லை.

முகாம் அமைந்துள்ள பகுதியில், அந்தக் கட்சியினர் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினால், அது விடுதலைப் புலிகளைச் சீண்டிவிடும் செயலாக அமைந்துவிடும். அந்தக் கட்சியின் இந்த முயற்சி தொடர்பாக, அவர்களுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் - அது சாத்தியப்படவில்லை என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஐ.நா. சபைக்கு கல்வியமைச்சர்

யுனெஸ்கோ நிறைவேற்றுச் சபைக்கு, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிர்வாக சபைக்கு இலங்கையர் ஒருவர் இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

190 நாடுகளில், 140 நாடுகள் இந்நியமனத்தை அங்கீகரித்துள்ளன.

# போராளி சாவடைந்தார்

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பில் ஏற்பட்ட சைக்கிள் விபத்தில் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். 2 ஆம் லெப்டினன்ட் ஆழிவேந்தன் என்றழைக்கப்படும் பேராண்ட நொச்சிக்குளம், சாத்திரிக்கூளாங்குளம், வவுனியாவை நிரந்தர முகவரியாகவும், பரணிக்குளம், சாத்திரிக்கூளாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் என்ற போராளியே சாவடைந்தவராவார்.

### கனேடிய...

சந்தித்து குடாநாட்டு நிலைவரம் தொடர்பாக ஆராயவுள்ளார்.

யாழ்.விஜயத்தை முடித்துக் கொண்டு வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளதாக, நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

### உழவு இயந்திரம்...

பட்டுள்ளார்.

நேற்று அச்சுவேலிப் பகுதியில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரியினைப் பார்த்துவிட்டு இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இவர்களை மோதிய உழவு இயந்திரத்தின் சாரதி அந்த உழவு இயந்திரத்துடன் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டார் எனக் கூறப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை நடத்தும் பொருட்டு இறந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (111)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

இக்கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவுகள் 18.10.2003 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன

புலமைப்பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிப் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்

இப்பிரிவில் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்

INSTITUTE OF INFIRMATICS STUDIES
100, Clock Tower Road Jaffna
(சி-1666)

# யாழ்.பல்கலை வளாகத்துள்...

கலைக்கழகத்தினுள் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலந்துரையாடல் நிறைவுபெற்று கூட்டத்தினர் வெளியேறிக்கொண்டிருந்த சமயம் பொலிஸார் நின்ற இடத்துக்கு வருகைதந்த மாணவர்கள், பொலிஸாரின் வருகை குறித்து, கலந்துரையாடலை ஏற்பாடு செய்தவர்களுடன் பிரஸ்தாபித்தனர்.

அரச உத்தரவுக்கு அமைய பாதுகாப்புக்கிற்காக பொலிஸார் வந்துள்ளதாக எடுத்துக் கூறப்பட்டும், மாணவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கையின் சட்டவிதிகளுக்கு இது முரணானது எனவும், பல்கலைக்கழக வளாகத்தினுள் ஆயுதம் தரித்த எந்த நபர்களும் உட்புக முடியாது எனவும் மாணவர்கள் எடுத்துக் கூறினர்.

அமைச்சர்களோ, வேறு அரசியல்வாதிகளோ பல்கலைக்கழகத்துக்கு வரும்போது, ஆயுதப் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை எனவும் மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேநேரம் - சம்பவ இடத்துக்கு வருகைதந்த சட்ட உதவி மன்றத் தலைவர் விஜேயரட்ண மாணவர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடினார். மாணவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்ட விஜேயரட்ண, ஆயுதம் தரித்த பொலிஸாரை அழைத்துவந்தமைக்காக தன்னை மன்னித்துக் கொள்ளுமாறு மாணவர்களிடம் வேண்டிக்கொண்டார். அத்தோடு, உடனடியாக பொலிஸாரை அங்கிருந்து வெளியேறுமாறு பணித்தார். இதனால், பொலிஸார் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறி பல்கலைக்கழக வீதியில் தரித்துநின்றனர்.

(ய,ச)

# தமிழரசுக் கட்சி புனரமைப்பு...

மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு ஏற்றவகையில் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தன்னிச்சையான செயற்பாடுகளால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைக் களைய, தமிழரசுக்கட்சியைச் சீரமைக்கப்போவதாகவும் -

தொடர்ந்தும் கூட்டணி நேர்மையான வழியில் செயற்படாவிட்டால், தமிழரசுக் கட்சி தனியாகப் பிரிந்து சென்று செயற்படுவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், மிக விரைவில் வடக்கில் கட்சியின் மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கும், இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியை மீண்டும் புனரமைப்புச் செய்வதற்காக இடைக்கால நிர்வாகக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம்- சச்சிதானந்தம், நல்லூர்- ச.யோகராஜா, உடுவில்- பரமேஸ்வரலிங்கம், காங்கேசன்துறை- சிவமகாராஜா, சாவகச்சேரி- அருளானந்தம், உடுப்பிட்டி - தங்கவடிவேலு, பருத்தித்துறை- ராமச்சந்திரா, கோப்பாய்- கிருஷ்ணராஜா, வட்டுக்கோட்டை- பேராசிரியர் சிற்றம்பலம், ஊர்காவற்றுறை- நடராஜா மற்றும் எவ்.எக்ஸ். குலநாயகம், கனகசபாபதி, மாவை சேனாதிராஜா ஆகியோரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

# கண்டனம் தெரிவித்து...

மறியற்போராட்டத்தில் பங்குபற்றினர்.

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி, யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம் ஆகியோர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரியுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடினர்.

மறியற்போராட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாநகர முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் கருத்துத் தெரிவிக்கையில் -

செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளரை இராணுவத்தினர் தாக்குவது ஓர் அநாகரிகமான செயலாகும். உண்மைச் சம்பவங்களை- பத்திரிகையாளர்களைத் தாக்குவதன் மூலம் மறைத்துவிடலாமென அவர்கள் எண்ணுகின்றனர். அப்படி இராணுவத்தரப்பு நினைத்துவிடக் கூடாது.

யாழ்ப்பாணத்தில் இப்படித் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் எனவும், பொதுமக்களின் உண்மையான பிரதிபலிப்பே இதுவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மறியற்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் -

"ரணிலின் ஆட்சியில் மானிப்பாய், நெல்லியடி, மடத்தடி, மாம்பழம் சந்தி எனப் பத்திரிகையாளரைத் தாக்கினாய். அடுத்தது எங்கே உனது கோரமுகத்தைக் காட்டப் போகின்றாய்?"

"கண்காணிப்புக்குழுவே உனக்கே இந்த நிலையா? எம் நிலையைச் சிந்தித்துப்பார்"

"சமூகத்தின் கண்ணாடிகளை உடைக்காதே"

"பத்திரிகையாளர்களைத் தாக்குவதன் மூலம் உண்மைகள் உறங்கும் என நினைக்கின்றாயா?"

"பாராளுமன்ற உறுப்பினர்களே இன்னும் பதவிமோகமா?"

"சிங்கள அரசின் பாராளுமன்றக் கதிரைகளுக்கு சுமையாக இருக்காதீர்கள்" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

# அரியாலையில் கைதான...

குண்டாந்தடிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளது.

இராணுவத்தினரின் இத்தகைய தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பல தரப்பினரும் காயமடைந்தனர்.

சமாதான நடவடிக்கைளுக்கு முரணான இராணுவத்தின் இத்தகைய அடாவடித்தனத்தில் வீதியால் சென்ற ஏதுமறியாத மாணவர்கள் தாக்கப்பட்டதோடு, கைதும் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான பாதகங்கள் - மாணவர்களை உடல், உள ரீதியாகப் பாதிப்படையச் செய்வதோடு, சீற்றம் கொள்ளவும் வைக்கின்றது.

இத்தகைய விரோதச் செயல்களை இனங்கண்டு அவற்றை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தும் நோக்கோடு, அவ்விடத்திற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கூட இராணுவத்தினரால் இனங்காணப்பட்டு - கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, அவர்களது புகைப்பட உபகரணங்களும் பறிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது.

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தாக்குதலானது, ஜனநாயகத்திற்கு எதிரான கடுமையாகத் கண்டிக்கத் தக்கதான செயற்பாடாகும்.

பத்திரிகையாளர்களை அவ்விடத்திற்கு அனுமதித்தால் அவர்கள் இராணுவத்தின் அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களையும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தி விடுவார்கள். இதனால், இராணுவத்தின் இத்தகைய சட்டத்திற்கு முரணான, சமாதானத்திற்கு விரோதமான செயற்பாடுகள் அம்பலமாகி விடும் என்பதால் பத்திரிகையாளர்கள் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டுள்ளார்கள்.

பத்திரிகையாளர்கள் அரச படைகளால் தாக்கப்படுவது இதுதான் முதற்தடவையல்ல. இதற்கு முன்பும் பல தடவைகள் இராணுவத்தினரின் இவ்வாறான தாக்குதல் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு - பொதுமக்கள் மீது இராணுவத்தினர் வலிந்து தாக்குதல் நடத்தி, மக்களோடு வன்முறைப் போக்கிற்குச் செல்வது சமாதான நடவடிக்கைகளுக்கு சாதகமானதாக அமையாது.

எனவே, இராணுவத்தினரின் அடாவடித்தனமான இத்தகைய செயற்பாடுகள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் இராணுவத்திற்கு எதிராக பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து - அதனால், சமாதான நடவடிக்கை குழப்பமடைந்து அவற்றால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும், இராணுவத்தினரே ஏற்க வேண்டியிருக்கும் என்பதை தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள் இச்சந்தர்ப்பத்தில் அரசுக்குக் கூறி வைக்க விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச,ய)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.